விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 04 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 11 திங்கட்கிழமை (25.06.2012) | பக்கங்கள்: பதினாறு

## வடக்கில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப திட்டம் உயர்தரத்தில் சித்தியடைந்தோருக்கு வாய்ப்பு

"வட பகுதியில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தி பெற்றுள்ள மாணவ மாணவியர்கள் ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். விரைவில் பதவிகள் வழங்கப்படும்" என்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார். ஆரம்பச் சம்பளமாக மாதாந்தம் பத்தாயிரம் ரூபா வழங்கப்படுமென்றும் அவர் கூறினார். வட பகுதியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி விலாவாரியாக விபரித்து 'தமிழ் நாதம்' கேள்வி எழுப்பியது. அப்பொழுதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

வடபகுதியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அவர் சொன்னார். வடக்கின் பல பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் உட்படப் பல பாடங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி 'தமிழ் நாதம்' சுட்டிக்காட்டிக் கேள்வி எழுப்பியது.

விரைவில் வடக்கில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்படுமென்று உறுதிபடத் தெரித்த அவர், பல்வேறு பாடசாலைகளில் முக்கிய பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லையென்ற உண்மை தனக்கும் தெரியுமென்று சொன்னார்.

குறிப்பாகக் கிராமியப் பாடசாலைகளில் இந்த நிலை நிலவுவதாகவும் சொன்னார்.

வடபகுதியில் வேலைவாய்ப்பின்றி ஜீ.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தி பெற்ற ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர்.

ஆரம்ப சம்பளமாகப் பத்தாயிரம் ரூபா வழங்கி ஆசிரியர் சேவையில் உள்வாங்கவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

## சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் சேர 2000 முன்னாள் புலி உறுப்பினர்கள் விண்ணப்பம்

புனர்வாழ்வளிக்கப்பட் முன்னாள் புலி உறுப்பினர்களை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் உள்வாங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்தார்.

இதன் ஓர் அங்கமாக புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்ட கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 2000ற்கும் அதிகமான முன்னாள் புலி உறுப்பினர்கள், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் இணைவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையானவர்களை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது. இதன் ஊடாக அவர்கள் வடபகுதியின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.


அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன், சிவில் பாதுகாப்புத் திணைக்கள சம்பள அளவுத்திட்டத்துக்கு அமைய இவர்களுக்கு சம்பளம் வழ்ங்கப்படும். மாதாந்தம் 18 ஆயிரத்துக்கும் குறைவடையாத சம்பளம் இவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆனந்த பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் அவர்களை இணைக்கும் பணிகள் நடைபெறவிருப்பதுடன், எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டமும் தயாரிக்கப்பட்டிருப்பதாக (2 ஆம் பக்கம் பார்க்க)

## 60 பேருடன் மற்றொரு படகு அவுஸ்திரேலியாவில்

கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் கடலில் மூழ்கியவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த அவுஸ்ரேலிய கடற்படையின் மீட்புக் கப்பல் இந்தப் படகைத் தடுத்து நிறுத்தியிருப்பதாக. அவுஸ்திரேலியாவின் உள்விவகார அமைச்சர் ஜாசன் க்ளெயர் தெரிவித்தார். இந்தப் படகில் 60 பேர் இருந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைளிலிருந்து தெரியவந்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த விமானம் குறித்த படகை (2 ஆம் பக்கம் பார்க்க)

## புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 2000 தமிழர்களை திருப்பியனுப்ப சுவிஸ் திட்டம்




தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இரண்டாயிரம் தமிழர்களை சுவிற்சர்லாந்து அரசாங்கம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பத் தீர்மானித்துள்ளதாக சுவிஸ் குடிவரவு குடியகல்வு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த முடிவையடுத்து பல்வேறு தமிழ் அமைப்புகள் பங்கேற்ற கூட்டம் ஒன்று சுவிஸ் நகரான பேர்னில் இரண்டு நாட்களுக்கு முன்னர் கூட்டப்பட்டு தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையர், அதிகாரிகள், புலம்பெயர்தோருக்கான அனைத்துலக அமைப்பின் பிரதிநிதிகள், தமிழர் பிரதிநிதிகள், சுவிஸ் குடிவரவு குடியகல்வு பணியகத்தின் அகதிகள் விவகார (2 ஆம் பக்கம் பார்க்க)

### டெங்கு ஒழிப்பு மாதம் பிரகடனம்

## காலை 7.30 தொடக்கம் 8.30 வரை பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு





யாழ்.குடாநாடு உட்பட நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளில் இன்று 25ஆம் திகதி காலை 7.30 தொடக்கம் 8.30 வரையிலான நேரத்தை டெங்கு ஒழிப்புக்கான நேரமாக டெங்கு ஒழிப்புக்கான ஜனாபதிபதி செயலணி பிரகடனப் படுத்தியுள்ளது.

இன்று தொடக்கம் அடுத்த மாதம் 25ஆம் திகதி வரையான ஒரு மாத காலம் டெங்கு ஒழிப்புக்கான மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


இந்த ஒரு மாத காலத்தில் நாடளாவிய ரீதியில் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைககள் முன்னெடுக்கப்படும்.

டெங்கு நுளம்புகளை ஒழிப்பது, நுளம்பு (2 ஆம் பக்கம் பார்க்க)

## கொடுப்பனவு கிடைக்காத ஆசிரியர்கள் மேன் முறையீடு செய்யலாம்

வடமாகாணத்திலுள்ள கஷ்டப் பிரதேச மற்றும் அதிகஷ்டப் பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான படிகள் தொடர்ந்தும் வழங்கப்படுமென்று ஆளுநர் உறுதியளித்துள்ளார். இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்ட பாடசாலைகள் சம்பந்தமான தகவல்கள் உரிய முறையில் சீர்செய்யப்படும் வரை தொடர்ந்தும் (2 ஆம் பக்கம் பார்க்க)

## குருநாகலில் விபத்து: ஐவர் ஸ்தலத்தில் பலி



குருநாகல் பொத்துஹர பிரதேசத்தில் பஸ் வண்டியொன்றும், முச்சக்கர வண்டியொன்றும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் ஸ்தலத்திலேயே பலி யாகியுள்ளனர். இவ்விபத்து கொழும்பு - குருநாகல் வீதியிலுள்ள பொத் துஹர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்புக்க சந்தியில் நேற்றுமாலை 5.20 மணிக்கு இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இவ்விபத்தில் 2 பெண்களும், 3 ஆண்களும் உயிரிழந்துள்ளனர். (2 ஆம் பக்கம் பார்க்க)

## சங்கானைப் பெண்ணின் மரணம் கட்டி வெடித்ததால் ஏற்பட்டது

"கருவைக் கலைக்க நாட்டு வைத்தியம், கடும் இரத்தப் போக்கால் பெண் பலி" என்ற தலைப்பில் கடந்த 22 ஆம் திகதி 'தமிழ் நாதம்' பத்திரிகையில் முன்பக்கத்தில் வெளியான செய்தி தவறானது என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

சங்கானையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயே மரணமானவர் என்று எமது செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. பெயர், வயது போன்ற விபரங்கள் எதனையும் குறிப்பிடாது எமது செய்தி வெளியானபோதும் அது தவறான ஊகங்களுக்கு வழிவகுக்கக் கூடுமென்பதால், இச்செய்தி சம்பந்தப்பட்ட பெண்ணின் உறவினர்களுக்கு மனக்கிலேசத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கும் என்பதனை (2 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நிறைவேற்ற வடக்கில் 436 பொலிஸார்

**ஜெனீவாவில் இலங்கையின் பிரதிநிதி மனி'ா அறிவிப்பு**

(எம்.ஐ.நிஷாம்தீன்)

"நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை உடனடியாக அமுல்படுத்துவதற்காக பொலிஸ் திணைக்களத்தில் 1133 தமிழர்கள் பணிபுரிகிறார்கள்" என்று ஜெனீவாவிலுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கூட்டத் தொடரில் உரையாற்றுகையில் இலங்கைக்கான பதில் தூதுவர் திருமதி மனிஷா குணசேகரா தெரிவித்தார்.

இவர்களில் 436 பேர் தற்போது வடபகுதிக்கும், 377 பேர் கிழக்கு மாகாணத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் "என்றும் அவர் கூறினார். மேற்படி கூட்டத் தொடரின் மூன்றாம் நாள் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

எமது நாட்டின் வடபகுதியில் தற்போது இராணுவத்தின் பலம் குறைக்கப்பட்டிருக்கிறது. இன்று அங்கு இருபதாயிரம் இராணுவ வீரர்களே இருக்கிறார்கள். நாட்டின் தேசியப் பாதுகாப்பை கருத்திற் கொண்டே இப்போது குறைந்தளவில் இராணுவ வீரர்கள் அங்கு உள்ளனர். வடபகுதியில் உள்ள இராணுவ வீரர்களின் எண்ணிக்கை யுத்தம் முடிவடைந்ததை அடுத்துப் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது.

தற்போது இராணுவத்தினர் பாதுகாப்பு தொடர்புடைய பணிகளில் மாத்திரம் ஈடுபட்டு வருகி றார்கள். இதனால் யுத்தத்திற்கு பின்னர் வட பகுதியில் படையினரின் பிரசன்னம் 40 சதவீதம் குறை ந்துள்ளது.

ஜெனீவா மனித உரிமை பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்காவின் அனுசரணையுடன் நிறைவேற்றப் பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணை செய்யத்தகாத செயல் என்ற நிலைப்பாட்டிலேயே இலங்கை தொடர்ந்தும் இருந்து வருகிறது.

இந்தப் பிரேரணை அநாவசியமான பிரேரணை. இது எங்கள் நாட்டின் உள்ளூர் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கு எந்த வகையிலும் உதவப்போவதில் லை .இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனால் இலங்கை மக்கள் சர்வதேச செயற்பாடுகள் மீது நம்பிக்கை இழக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மக்களின் இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டுள்ள நாம், நல்லிணக் கப்பாட்டை ஏற்படுத்து வதற்கு உள்ளூரிலேயே உருவாக்கப்பட்ட தீர்வை நடைமுறைப்படுத்து வதற்கு விரும்புகின்றோம்.

வெளிநாடுகளின், உள்நாட்டு விவகாரங்களில் இவ்விதம் தலையிடுவது அந்நாடுகளுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். சர்வதேச சமூகம் நெறியான, நிலையான கொள்கைகளைக் கடைப்பிடித்து பாகுபாடுகளை இல்லாமல் செய்வது அவசியம்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதி அமுனுகம அங்கு உரையாற்றுகையில்,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை முன்வைத்த சிபார்சுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது. இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் ஒரு ஜனாதிபதி செயலணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் சில யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக் குழு ஊடாக நிறைவேற்றப்படும் என்றும் சொன்னார்.

## பேருந்து நிலையம் புனரமைப்பு

அச்சுவேலி தனியார் பேருந்து நிலையத்தை நவீன முறையில் புனரமைப்புச் செய்வதற்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

48 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் இந்த பேருந்து நிலையம் புனரமைப்புச் செய்யப் படவுள்ளது. இதற்கான கேள்விப் பத்திரம் கோரும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இறுதிக்கிரியை

விக்னேஸ்வரா வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி பிரேமதாஸ் பேபி கடந்த 20ஆம் திகதி காலமானார். அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் இடம் பெற்று பூதவுடல் விளவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவரது வயிற்றில் கட்டி வெடித்து மிக மோசமான இரத்தப் பெருக்கு ஏற்பட்டதால் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ் நகரில் புதிய வங்கி கிளை இன்று திறப்பு விழா

பிரதேச அபிவிருத்தி வங்கியின் 25 ஆவது புதிய கிளை இன்று யாழ் நகரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு இலக்கம் 85,87 ஸ்ரான்லி வீதியில் இந்த புதிய கிளை திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு வங்கியின் புதிய கிளையினை திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவி திருமதி.கோசலா ஜயவர்த்தன மற்றும் வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி திரு.ஆர்.சிறிவர்த்தன ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மாங்குளம், பரந்தனில் மேலும் 20 அறிவகங்கள்

கிளிநொச்சி பரந்தன் சந்தி, மாங்குளம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் அறிவகங்கள் திறந்து வைக்கப்பட்டன. நெனசல என அழைக்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் ஆயிரம் அறிவகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. இலங்கை பூராவும் அறிவகங்களை ஏற்படுத்தும் இந்தத் திட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவில் உருவானதாகும். 668 ஆவது அறிவகம் மாங்குளத்திலும், 669 ஆவது அறிவகம் பரந்தனிலும் திறந்து வைக்கப்பட்டன.

இலங்கை தகவல் தொடர்பாடல், தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் இத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. கணினிப் பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகள் இங்கு வழங்கப்பட்டு வருகின்றன. "நாமல் ராஜபக்ஷ அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இன்னும் இருபது அறிவகங்களை வடக்கில் திறந்துவைக்கவுள்ளோம்.

## சிவில்..... (தொடர்)

அவர் மேலும் தெரித்தார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 2000 பேருக்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் இணைந்து கொள்வதற்கான விண்ணப்பப்டிவங்களை விநியோகிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர் சி.பி.ரத்னாயக்க, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, ஹம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேச சந்திரகுமார் உள்ளிட்ட முக்கயஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## குருநாகலில் விபத்து......(தொடர்)

குருநாகலிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் வண்டியும், கொழும்பிலிருந்து குருநாகல் நோக்கிச் சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டியுமே நேருக்கு நேர் மோதிக்கொண்டுள்ளன. இவ்விபத் தில் முச்சக்கர வண்டியில் சென்ற ஐவரே ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

## காலை 7.30 தொடக்கம்.... (தொடர்)

பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது, நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான இடங்களை இல்லாமல் செய்வது, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே பாடசாலைகளில் இன்று காலை 7.30 தொடக்கம் 8.30 வரையான காலப்பகுதி டெங்கு ஒழிப்புக்கான நேரமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

அத்துடன் டெங்கு ஒழிப்பு மாதத்துக்கான பிரதான தேசிய வைபவம் இன்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சிலாபத்தில் நடைபெறுகிறது. இதேவேளை, டெங்கு நோய் காரணமாக கடந்த 6 மாத காலப்பகுதியில் 15,500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 75 பேர் நோய் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் வடமாகாணத்தில் டெங்கு நோயினால் இந்த (2012) ஆண்டில் எந்தவொரு உயிரிழப்பும் ஏற்படவில்லை.

## 60 பேருடன்.... (தொடர்)

முதலில் அடையாளம் கண்டதாகவும், அதன் பின்னர் மீட்புக் கப்பல் அதனைத் தடுத்து நிறுத்தியதாகவும் அந்நாட்டு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் படகில் வந்தவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு மாற்றப்பட்டிருப்பதுடன், அவர்கள் மருத்துவ மற்றும் அடையாளச் சோத னைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவுஸ்திரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக 200 பேருடன் சென்ற படகு கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் நடுக்கடலில் மூழ்கியுள்ளது. இதில் 110 பேர் மீட்கப்பட்டதுடன், 90 பேர் காணாமல் போயிருந்தனர். நீரில் மூழ்கியவர்களில் 17 பேருடைய சடலங்கள் மீட்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன. இந்த மீட்புப் படகுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக அவுஸ்திரேலிய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடத்தில் மாத்திரம் 4568 பேர் அவுஸ்திரேலியாவுக்குப் படகுகள் மூலம் சட்டவிரோதமாகச் சென்றுள்ளனர். ஜூன் மாதத்தில் மாத்திரம் 17 படகுகளில் 1092 பேர் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்திருப்பதாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனவரி மாதத்தில் 5 படகுகளில் 308 பேரும், பெப்ரவரி மாதத்தில் 9 படகுகளில் 887 பேரும், மார்ச் மாதத்தில் 3 படகுகளில் 115 பேரும், ஏப்ரல் மாதத்தில் 13 படகுகளில் 971 பேரும், மே மாதத்தில் 14 படகுகளில் 1195 பேரும், ஜூன் மாதத்தில் 17 படகுகளில் 1092 பேர் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்திருப்பதாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சங்கானை... (தொடர்)

நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

வயிற்றில் ஏற்பட்ட கட்டி வெடித்து, அதனால் ஏற்பட்ட இரத்தப் பெருக்குக் காரணமாகவே அந்தப் பெண் மணி மரணித்தாரெனச் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

எமது தவறான செய்தி சம்பந்தப் பட்ட குடும்பத்தினருக்கு அகௌரவத்தை ஏற்படுத்தியிருக்கும் என் பதை ஏற்றுக்கொண்டு தவறுக்கு வருந்துவதோடு அவரது குடும்பத் தினரிடம் மன்னிப்பும் கேட்டுநிற் கின்றோம். (ஆ-ர்)

## புகலிடக் கோரிக்கை.... (தொடர்)

அதிகாரிகள் பங்கேற்றனர்.

தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட வெளிநாட்டவர்களை நாடுகடத்தும் சுவிஸ் அரசின் முடிவு குறித்து சுவிஸ் அதிகாரிகள் இங்கு தகவல் வெளியிட்டனர்.

மாதம் ஒன்றுக்கு 100 இலங்கையர்கள் சுவிஸில் புகலிடம் கோருவதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் தமது கோரிக்கைக்கு வலுவான காரணங்களைக் காட்டுவதில்லை என்றும் சுவிஸ் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கூறியுள்ளனர்.

இதற்கிடையே 1952 ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் போரை அடுத்து சுவிஸ் அரசாங்கம் கொண்டு வந்த குடிவரவு, குடியகல்வு நடைமுறைகளைப் புதுப்பிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கொடுப்பனவு கிடைக்காத... (தொடர்)

படிகளை வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

மீள்குடியேற்றம் நடைபெறும் வன்னிப் பிரதேச பாடசாலைகளின் படிகள் நிறுத்தப்பட்டமை அங்குள்ள ஆசியர்களின் நலனில் பாடசலைகளின் வளர்ச்சியில் பெரிதும் பாதிப்பை உண்டுபண்ணும். ஆகையால் நிறுத்தப்பட்ட படிகள் மீளவும் வழங்க' நடவடிக்கை எடுக்க வேண்டுமென வடமாகாண கல்வி அமைச்சில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற ஒன்றுகூடலில் முடிவெடுக்கப்பட்டதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சராபுவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

படிகள் நிறுத்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உடனடியாகத் தமது வலயக் கல்வி அலுவலகமூடாக அதற்கான சீர்செய்தல் மேன்முறையீட்டினை வடமாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி அதன் பிரதியினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற ஒன்றுகூடலில் வடமாகாண ஆளுநரால் பணிக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், ஆளுநரின் செயலாளர் சகிதம் வடமாகாண பிராந்திய ஆணையாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய தொழிற் சங்கங்கள், வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு உள்ளிட்ட அனைவரையும் அழைத்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இவ்வாறு மேற்படி ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய இராசி பலன் (25.06.2012)

நந்தன வருடம் ஆனித்திங்கள் 11 ஆம் நாள் திங்கட்கிழமை
நட்சத்திரம் : பூரம் பின்னிரவு 4.17 வரை. அதன்பின் உத்தரம்
திதி : சஷ்டி இரவு 8.33 வரை. அதன் பின் ஸப்தமி
சுபநேரம்: 11.55 - 1.25 இராகுகாலம் : 7.25 - 8.55

மேடம் : பொருள் கஷ்டம், தொழில் வகையில் சிக்கல், குறை கேட்டல்
இடபம் : இடமாற்றம், மனநிம்மதிக் குறைவு, வீண்விரயம்
மிதுனம் : மார்பு ரோகம், சிறுதூரப் பிரயாணம், சகோதரச் செலவு
கடகம் : வயிற்று ரோகம், கடன்படல். புத்திரச் சஞ்சலம்
சிங்கம் : வாக்குக் கலகம், அமைதியின்மை, சிறுபிரச்சினை
கன்னி : உடல்நிலை பாதிப்பு, பொருட்செலவு, வாக்கு விரோதம்
துலாம் : பொருள் வரவு, வாகன சுகக்குறைவு, சிரசு ரோகம்
விருச்சிகம்: மன மகிழ்ச்சி, தொழில் வகையில் விருத்தி, விருந்துபசாரம்
தனுசு : முன்கோபம், பிடிவாதம், குறைகேட்டல்
மகரம் : மனமகிழ்ச்சி, தொழில் வகையில் திருப்தி, நண்பர்கள் உதவி
கும்பம் : வீண் அலைச்சல், பொருட்சேதம், கருத்து வேற்றுமை
மீனம் : தேக சுகக்குறைவு, கைப்பொருள் இழப்பு, எதிர்பாராத திருப்பம்
(சுபநேரம், இராகுகாலம் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

- ஜோதிடர் பால.இரத்தினசேகர் -

# தெற்கில் மாணவர்கள் பெறும் சகல வசதிகளும் வடபகுதி மாணவர்களுக்கும் கிடைக்கின்றது

## பேராசிரியர் எஸ்.ஆர்.டி.றோசா

தென்னிலங்கை மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புக்கள் இங்குள்ள மாணவர்களுக்கும் கிடைக்கப்பெற்று வருகின்றது என்று கொழும்பு பல்கலைக்கழக பௌதீகவியல் பேராசிரியர் எஸ். ஆர். டி. றோசா தெரிவித்துள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞான சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள மொழியில் வருகின்ற கல்விசார் வெளியீடுகள் இன்று தமிழ் மாணவர்களும் பயன் பெறக்கூடிய வகையில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் தமிழ் மாணவர்கள் நன்மை அடைந்து வருகின்றார்கள். மாணவர்களுக்கு நன்மை தரக்கூடிய சஞ்சிகையாகவே இந்த விஞ்ஞான சஞ்சிகை வெளிவருகிறது.


அத்துடன் மாணவர்கள் எழுத்துத் திறன்களை வளர்ப்பதன் ஊடாக வெற்றிகளை பெற முடியும். பரீட்சை நெருங்கிவருகின்ற காலங்களில் மாணவர்கள் ஓய்வின்ற பல ஆசிரியர்களிடம் கல்வி கற்று வருகின்றனர். பரீட்சைகளின் போது பதில் தெரிந்து என்ன பதில் அளிப்பது என்ற குழப்பத்தில் விளக்கங்களுக்கான விடையளிப்பதில் தவறுகளைச் செய்கின்றார்.

அதைவிட மாணவர்களையே எழுத்தாற்றல், வாசிப்பாற்றல் அருகி வருவதை காணமுடிகின்றது. மாணவர்கள் தங்கள் எழுத்தாற்றல்களை வளர்த்துக் கொள்கின்றார்களோ அதற்கேற்ற பயனை அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் என்று கொழும்பு பல்கலைக் கழகத்தின் பௌதீகவியல் பேராசரியர் எஸ்.ஆர்.டி.றோசா தெரிவித்தார்.

வெற்றி பப்ளிக்கேசன் நிறுவனத்தின் வெளியீடான Science Today மாதாந்த சஞ்சிகை வெளியீடு நேற்று யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

பௌதீகவியல் ஆசிரியர் எஸ். சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூலினை கொழும்பு பல்கலைக்கழக பௌதீகவியல் பேராசிரியர் வெளியிட்டு வைக்க யாழ்.இந்துக் கல்லூரியின் உப அதிபர் திருமதி சுரேந்திரன் பெற்றுக்கொண்டார்.

மாணவர்களின் கற்றல் வழிமுறையை இலகுபடுத்தும் நோக்கில் இந்தச் சஞ்சிகை மாதாந்தம் வெளிவர இருக்கின்றது. இந்த வெளியீட்டு நிகழ்வில் வட மாகாண, மக்கள் தொடர்பாடல் சேவை அதிகாரி அமிர்தலிங்கம், பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் குணசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# தெல்லிப்பழை பொலிஸாரின் நடமாடும் சேவை

(வலிகாமம்)

தெல்லிப்பழை பொலிஸாரின் நடமாடும் சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

இந்த நடமாடும் சேவையை காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சர் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வலி. வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், சுகாதார வைத்தியதிகாரி நந்தகுமார், தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் சாந்த மோகன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து இடம்பெற்ற நடமாடும் சேவையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, ஆயுர்வேத வைத்தியசாலை, பொலிஸ் மருத்துவப் பிரிவு ஆகியவற்றினால் பொது மக்களுக்காக மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டதுடன் தேசிய அடையாள அட்டை, சாதி அனுமதிப்பத்திரம் மற்றும் சிறு குற்றச் செயலகள் சம்பந்தமாக பொலிஸ் பதிவுகள் இடம் பெற்று முறைப்பாடுகள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# போலி விஸாவுடன் பிரான்ஸ் பயணம்: புதுடில்லியில் இலங்கையர் கைது

போலி விஸாவில் பயணித்த இலங்கை பிரஜை ஒருவர் இந்திய புதுடில்லி இந்திரா காந்தி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து சென்ற கிருபாகரன் முத்துலிங்கம் என்பவர் கடந்த வியாழனன்று டில்லி விமான நிலையத்தை சென்றடைந்ததோடு அங்கிருந்து கடந்த வெள்ளிக்கிழமை காலை பிரான்ஸின் பரிஸ் நோக்கிச் செல்லவிருந்தார்.

குறித்த நபர் விமான நிலை குடிவரவு அதிகாரிகளால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவரது கடவுச்சீட்டில் 13வது பக்கம் போலியானது என கண்டறியப்பட்டது.

போலியான விஸா பெற்று அதில் கடவுச்சீட்டில் ஒட்டப்பட்டிருந்ததாக தெரியவந்துள்ளது.

கொழும்பில் உள்ள விஸா நிலையம் ஒன்று 2 இலட்சம் ரூபாவிற்கு தனக்கு விஸா பெற்றுக் கொடுத்ததாக கிருபாகரன் முத்துலிங்கன் விசாரணையில் கூறியுள்ளார்.

அதன் பின்னர் இந்திய குடிவரவு குடியகழ்வு அதிகாரிகளை ஏமாற்றிய குற்றச்சாட்டில் அவர் டில்லி விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கொழும்பு பயண முகவர் நிலையம் ஒன்றில் பணிபுரியும் ரமேஸ் என்பவர் தனக்கு இந்த விசாவை வழங்கியதாக முத்துலிங்கம் கூறியுள்ளார்.

இந்த விடயம் குறித்து இந்தியாவில் உள்ள இலங்கை தூதரகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் உள்ள ரமேஸ் மற்றும் பயண முகவர் நிலையம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண் கழுத்து நெரித்துக் கொலை

## சந்தேகநபர் கைது: மொனராகலையில் சம்பவம்

பெண் ஒருவர் மீது காணப்பட்ட வெறுப்பால், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பின் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த (2012-06-19) 19ஆம் திகதி இரவு 10 மணியிலிருந்து (2012-006-23) 23 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு உட்பட்ட காலத்தில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை - குமாரதொல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய மாயழகு லோகேஸ்வரி என்ற பெண்ணே இவ்வாறு குமாரதொல தண்ணீர் பந்தலுக்கு அருகில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த பெண் திருமணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# யாழ்.குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். சிறிகுகநேசன்

யாழ்.குடாநாட்டில் கழிவு எண்ணைக் கலாசாரத்தை இல்லாமல் செய்வதற்கு பொலிஸாருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.சிறிகுகநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மணியளவில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொலிஸார் பொதுமக்களின் உதவி-களை எதிர்பார்கின்றனர். குற்றச் செயல்கள் தொடர்பாக பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் தர வேண்டும்.

கடந்த வாரம் யாழ். குடாநாட்டில் நடைபெற்ற பாரிய மற்றும் சிறு குற்றச் செயல்கள் பல இடம் பெற்றுள்ளன.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பெண் ஒருவரை கத்தியால் குத்திக் கொலை செய்த சந்தேக நபர், கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2010 ஆண்டு சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 5,49,000 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தில் பித்தளை தகடுகள் கடத்தலில் ஈடுபட்டமை தொடர்பாக சீமெந்து தொழிற்சாலைக் காவலாளியினால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு வடபிராந்தியத்தில் சென்ற வாரம் இடம் பெற்ற பாரிய குற்றச்செயல்களாக மன்னார் பகுதியில் 773 கிராம் கிரோயின் போதைப் பொருளுடன் இந்தியர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் வீதி விபத்தில் உயிரிழந்தமை பொடர்பாக வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். ஓமந்தைப் பகுதியில் பாவிக்கப் பட்ட குண்டுகளை லொறியில் கடத்த முற்பட்ட சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் என்பன பதிவாகியுள்ளன.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, சுன்னாகம், இளவாலை, காரைநகர், ஊர்காவத்துறை, காங்கேசன்துறை ஆகிய பிரதேச உதவிப் பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியிலிருந்து தண்டவாளங்களை கடத்திய ஐவர் புத்தளத்தில் கைது!

கிளிநொச்சியில் இருந்து சட்ட விரோதமான முறையில் ரயில் தண்டவாள இரும்புகளை லொறியில் ஏற்றிக் கொண்டு சென்ற ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் சிரம்பியடி பிரதேசத்தில் பயணித்துக் கொண்டிருந்த லொறியை நேற்று முன்தினம் (23) இரவு பொலிஸார் சோதனை செய்தபோது அதிலிருந்து 37 ரயில் தண்டவாள இரும்புத் துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் இருந்து இந்த இரும்புகளைக் கடத்திவந்த புத்தளம் மற்றும் பாலாவி பகுதியில் வசிக்கும் ஐந்து சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# மதுரை - கொழும்பு விமான சேவை செப்டெம்பர் மாதம் ஆரம்பம்

மதுரை - கொழும்புக்கு இடையே நேரடி விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் விமானசேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவிடம் மதுரை சுற்றுலா கழக அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்த மதுரை சுற்றுலா கழகத் தலைவர் பி.எஸ்.ஜி. முஸ்தபா தலைமையிலான குழுவினர் அமைச்சர் பிரியங்கார ஜயரத்னவை கொழும்பில் சந்தித்து பேசியபோது, அவரிடம் கொழும்பு- மதுரை இடையேயான விமான போக்குவரத்தை தொடங்குவது தொடர்பான மனுவை கையளித்தனர்.

பின்னர் அவர்கள் இலங்கை வணிகதுறை தலைவர் ரோகன பெரேரா மற்றும் மிகின் லங்கா அதிகாரிகளையும் சந்தித்தனர். முடிவில் மிகின் லங்கா விமானம் தனது சேவையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் தொடங்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள முன்னணி சுற்றுலா துறை அமைச்சகத்தையும் மதுரை சுற்றுலா கழக குழுவினர் சந்தித்துப் பேசினர்.


இந்த கூட்டத்தில் மதுரை - கொழும்பு இடையே விமான போக்குவரத்து தொடங்கப்படுவதன் மூலம் சுற்றுலா துறை வளர்ச்சி அடையும். தென் தமிழகத்தில் இருந்து ஏராளமானோர் இலங்கை சென்று வருவதால் வருவாய் கிடைப்பதுடன் பொருளாதாரம் வளர்ச்சி அடையும்.


மேலும் சுற்றுலா துறையை மதுரைக்கு வந்து விமான போக்குவரத்தை மேம்படுத்தி கலந்துரையாட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் அதற்கான திகதி எதுவும் முடிவு செய்யப்படவில்லை.

மதுரையில் இருந்து இலங்கை வந்தவர்களில், மதுரை சுற்றுலா கழகத்தின் முன்னாள் தலைவர்கள் டாக்டர் ஜி.வாசுதேவன், என்.ஸ்ரீராம், செயலாளர் எஸ்.செந்தில்நாதன், உறுப்பினர் எஸ்.ராசகோபாலன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# வடபுலத்து மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்










பண்டைக் காலந்தொட்டு 1980களின் நடுப்பகுதி வரை வடமாகாணத்தின் பொருளாதாரத்தில் பாரிய செல்வாக்கினைச் செலுத்திவந்த கடற்றொழில் துறை இன்று பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இத்தொழிலை முற்றுமுழுதாக நம்பி வாழ்ந்த வடமாகாண கடற்றொழிலாளர்கள் மாற்றுத் தொழிலைத் தேடி அலையவேண்டிய நிலை தோன்றியுள்ளது.

நாட்டிலுள்ள ஏனைய பகுதிகளிலுள்ள மீனவர்கள் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அதிநவீன மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் எமது வட்புல மீனவர்கள் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மீன்பிடி முறைகளைக் கொள்வனவு செய்து தொழில் செய்ய முடியாதவர்களாகியுள்ளனர்.

கடந்த 30 வருடகாலமாக போரின் வலிகளைச் சுமந்து பொருளாதார இழப்புக்களை எதிர்கொண்ட இந்தவடபுல மீனவர்களால் தமது சொந்த நிதியில் பாரிய மீன்பிடிக் கலங்களைக் கொள்வனவு செய்ய முடியாமல் உள்ளது.

நாட்டிலுள்ள ஏனைய பகுதி மீனவர்களுக்கு கிடைக்கின்றதைப் போன்ற இலகு வட்டிக் கடன்களையும் இந்த வடபுலத்து மீனவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இதன் அடிப்படையில் வடபுல மீனவர்கள் ஆண்டாண்டு காலமாகப் பின்பற்றி வந்த அதே மீன்பிடித் தொழில் முறையினையே தற்பொழுதும் பின்பற்றி வருகின்றனர்.

இந்த வடபுல மீனவர்களின் வறுமையினைப் போக்கி பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு ஆழ்கடல் மீன்பிடித்தொழில் முறையினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இந்த ஆழ்கடல் மீன்பிடிக்குப் பயன்படுத்தும் பாரிய கடற்கலங்களைக் கொள்வ னவு செய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து இந்தத் தொழில் முறையினை எமது மீனவர்களும் கற்றுக் கொள்ளக் கூடிய பயிற்சிகளையும் வழங்க வேண்டும்.

தற்பொழுது வடபுல மீனவர்கள் சிறிய படகுகளைப் பயன்படுத்தி கரையோர மீன்பிடி முறைகளின் உதவியுடன் மீன்பிடித்து வருகின்றனர். இந்த மீன்பிடி முறையினை அனைத்து மீனவர்களும் பின்பற்றுவதால் அதிகளவான மீன்பிடிபடுவது கட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் மீனவர்கள் மிகவும் வறிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

சுனாமியின் பின்னர் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மிகவும் அதிகளவான சிறிய மீன்பிடிக் கலங்கள் வடபகுதி மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனாலேயே இக்கரையோர மீன்பிடித் தொழிலாளர்களின் நிரம்பல் அதிகரித்து மீனவர்களின் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது.

இதனை மாற்றியமைத்து வடபுல மீன்பிடித்துறைக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி மீனவர்களின் வறுமையினைப் போக்க ஆழ்கடல் மீன்பிடி முறைகளான பலநாட் கலங்களையும், லோங்லைன் எனும் தூண்டில் மீன்பிடித்தொழில் முறைகளையும் எமது வடபுல மீனவர்களுக்கும் அறிமுகப்படுத்த வேண்டும்.

போருக்குப் பின்னர் மீள்குடியமர்ந்தப்பட்ட வடபகுதி மீனவர்களின் வாழ்வாதார உதவிகளுக்கான கொடுப்பனவுகள் பெரும்பாலான மீனவர்களுக்கு இன்று வரையும் கிடைக்கவில்லை. இதே போன்று உதவி கிடைத்தவர்களுக்கும்கூட அது போதுமானதாக இல்லை.

குறிப்பாக ஒரு மீன்பிடிக் குடும்பத் திற்கு ஓர் இலட்சம் ரூபாவே கிடைத்துள்ளது. ஆனால் சாதாரணமாகக் கடற்தொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஐந்து இலட்சம் ரூபா தேவையாகவுள்ளது.

இந்த நிலையில் தொண்டு நிறுவனங்கள் வாழ்வாதார உதவி-களை வழங்கும் பொழுது இது போன்ற விடயங்க ளைக் கவனிப்பதில்லை என்பது குறையாகவுள்ளது.

இதேபோன்று தென்பகுதி மீனவர்களும் இந்திய மீனவர்களும் வடபகுதி மீனவர்களின் தொழிலை அழிவடையச் செய்யக் கூடிய வடபகுதிக் கடல் வளத்தினை அழிக்கக்கூடிய தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்துகின்றனர். இதனால் வடபுல மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் இழுவை மடித்தொழில் முறையினால் வடபகுதியின் மீன்வளம் முற்றாக அழிவடைந்துள்ளது. இந்த வடகடற் பகுதியின் கடல் வளத்தினைப் பாதுகாப்பதற்கு சகல தடை-செய்யப்பட்ட தொழில் முறைகளையும் தடைசெய்ய வேண்டும் என்று

**யாழரசன்**

பிரதேச மீனவர்கள் விடுத்த வேண்டுகோளும் கருத்தில் கொள்ளப்பட வேணடியுள்ளது.

தென்பகுதி மீனவர்கள் அதிநவீன முறைகளைப் பயன்படுத்தி ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ரியூனா (Truna) வகை மீன்களைப் பிடித்து ஏற்றுமதி செய்து பாரிய அளவான பொருளாதார் நன்மைகளை அடைந்து வருகின்றனர்.

இதே போன்ற வசதிகளை எமது வடபுல மீனவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த பாரிய மீன்பிடிக் கலங்களைக் கடற்கொந்தளிப்பான காலப்பகுதியில் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்குரிய மீன்பிடித் துறைமுகங்களையும் அமைக்க வேண்டும்:

மயிலிட்டிப் பகுதியில் இருக்கின்ற மீன்பிடித் துறைமுகத்தினைப் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடுமாறும் வடபுல மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேபோன்று குருநகர், பாசையூர், இன்பருட்டிப் பகுதிகளிலும் மீன்பிடித் துறைமுகங்களை அமைக்குமாறும் மக்கள் கோரியுள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளுக்கு அமைய துறைமுகங்கள் அமைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட பொழுதும் வேலைத்திட்டங்கள் எவையுமே இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லை.

இந்த மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்கப்பட்டு வடபுல மீன்பிடித் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும். இதன் ஊடாகவே எமது மீனவர்களின் வறுமையினைப் போக்க முடியும்.

தற்பொழுது வடபுல மீனவர்கள் மீன்பிடித் துறையினை கைவிட்டு மாற்றுத் தொழில்களை உள்ளூரிலும், வெளியூரிலும் தேடிவருகின்றனர். இந்த நிலையினைப் போக்கி மீண்டும் வடபுல மீனவர்களுக்கு வசந்தம் ஏற்பட வழிவகை செய்யப்பட வேண்டும்.

தொண்டு நிறுவனத்தினரும், அரச அதிகாரிகளும் இத்துறை தொடர்பாகத் திட்டமிடும் பொழுது பிரதேச மக்களின் அறிவுரையினையும் கேட்க முன்வரவேண்டும். குறிப்பாக சுண்டிக்குளம் கடல் நீரேரியில் இருபத்தையாயிரம் இறால் குஞ்சுகள் விடப்பட்டு அதன் ஊடாக மீனவர்கள் நன்மை அடையும் திட்டம் எதிர்பார்த்த பயனைத்தரவில்லை.

உரிய காலத்தில் அறுவடை செய்ய (இறால் பிடிக்க) பிரதேச மீனவர்களுக்கு அனுமதியளிக்காமையினால் எதிர்பார்த்த பயனை அடைய முடியவில்லை.

கடந்தகாலங்களில் இயற்கையாக அடைந்த பயனைக்கூட இம்முறை பிரதேச மீனவர்களால் பெற்றுக் கொள்ள முடியாமல் போயுள்ளது. இதற்கு இத்துறையுடன் தொடர்புடைய அதிகாரிகளின் வினைத்திறனான திட்டமிடலின்மையே காரணமாகவுள்ளது.


இதுபோன்ற பொருத்தமற்ற தீர்மானங்கள், திட்டமிடல்களைத் தவிர்த்து உரிய முறையில் வடபுல மீனவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முன்வரவேண்டும்.

எண்பதுகளின் நடுப்பகுதியைப் போன்று மீண்டும் வடமாகாணத்தில் மீன்பிடித் துறையினை மேம்படுத்தி இந்த மீனவர்களின் வாழ்வாதாரம் வளப்படுத்தப்பட வேண்டும்.

நாட்டிலுள்ள சகல அதிநவீன வசதிகளும் வடபகுதி மீனவர்களுக்கும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும்.

இது போன்ற விசேட திட்டங்கள் ஊடாகவே வடமாகாண மீன்பிடித் துறைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்ட முடியும். இதனையே வடபுல மீனவர்களும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.





# நாளாந்தம் நான்கு பத்திரிகைகள் வாசிக்கச் சொன்னார்

# ஆதர் சீ கிளார்க்

வாசிப்புக் குறைந்துள்ளது என்பது பலரது கருத்தாகவுள்ளது. அப்படியாயின் வாசிப்பு எப்பொழுது அதிகரித்திருந்தது? 19ஆம் நூற்றாண்டிலா? 20ஆம் நூற்றாண்டிலா? 60வதுகளிலா? 70வதுகளிலா? என்பதைத் தெரிவிக்க வேண்டும். அன்றிலிருந்து இன்றுவரை வாசிப்புக் குறைந்துள்ளது என்றே கூறிவருகின்றனர். வாசிப்புச் சிறப்பாகவுள்ளது என எந்தக்காலத்திலும் கூறியதில்லை. வாசிப்புக் குறைந்துள்ளது என்பது ஒருவகை நோயா? ஏன் இதற்கு மட்டும் மாத்திரை கண்டுபிடிக்கவில்லை.

"புதியன புகுத்தல் பழையன கழிதல்" போல காலத்தின் கோலம் இன்று புதிய பரிமாணத்தில் வாசிப்பை மேற்கொள்ளவும், இல்லாதொழிக்கவும் செய்துள்ளது. "அறிவுசார் சமூகம்", "உலகளாவிய அறிவு" எனப் புதிய "பதங்கள்" குறிப்பிடுகின்றன. இதற்கு வாசிப்பு முக்கியமானதாகும். வாசிப்புக்கான தடைகள் என்ன என்பதை நாம் கண்டறிய வேண்டும். அதனைத் தேடி நீக்க முயற்சிக்க வேண்டும்."

இலங்கையில் வாழ்ந்த விஞ்ஞானி கலாநிதி ஆதர் சி கிளாக்கின் கூற்றுப்படி நாளாந்தம் நான்கு பத்திரிகைகள், வாராந்தம் இரண்டு பத்திரிகைகள், ஒரு மாதாந்த சஞ்சிகை ஒருவர் வாசிக்க வேண்டும் என்கிறார். இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு உலக அறிவை பெற்றுக் கொள்ளக்கூடிய திறவுகோல் வாசிப்பு என்றார். கற்றல், கற்பித்தல் முறைமாறி இன்று தேடிக்கற்றல் என்ற கல்வி முறையில் வாசிப்பு 80 சதவீதத்தினைக் கொண்டுள்ளதாக கல்வியியலாளர் மார்ஸ் டாவிட் குறிப்பிட்டுள்ளார்.

வாசிப்புத் திறனை வளர்த்தெடுக்க உலகநாடுகள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. இதன் முயற்சியாகச் சிறுவர்களை முதலில் கவரும் வகையில் தெளிவான படங்கள், கவர்ச்சியான நிறங்கள், சேர்த்து வாசித்தல் போன்ற முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுகளின்படி இலத்திரனியல் புத்தகங்கள் அழிந்து போகலாம். ஆனால் காகிதப் புத்தகங்கள் பேணப்படும் எனப்படுகிறது. ஆனால் இவ்விரண்டின் மூலமும் வாசிப்பு முக்கியமானது. எனவேதான் "வாசிப்பு ஒரு மனிதனை முழுமனிதனாக்கும்" எனவும், "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" எனவும் பிரான்சிஸ் பேக்கன் கூறுகிறார். வாசிப்பு ஒரு "பொக்கிஷம்", "ஒரு புதையல்" என்கின்றனர் அறிஞர்கள்.

"அரசின் கஜானா"வை விட "உயரியது புத்தகம்" என்கிறார் ரஸ்கின். வாசிப்பு மூலம் அறிவு வளர்ச்சி மட்டுமல்ல எழுத்துப்பிழையின்றி எழுதவும், கிரகிக்கும் சக்தியை ஏற்படுத்தவும் முடியும்.

அல்குர் ஆனில் கூட "ஓதுவீராக", "வாசிப்பீராக" என்று இறைவனே குறிப்பிடுகின்றார். 'நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்' என்ற பொன்மொழியும் உண்டு. "வாசிக்காமல் எழுத்தாளர் ஆகமுடியாது" என்கிறார் பிரபல எழுத்தாளர் போடின். "கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என எமது முதியோர் கூறுவர். இன்று கண்டதையல்ல தேவையானதைக் கற்பதே பெரிய விடயமாகவுள்ளது. தேவையான அறிவை பெறக்கூட வாசிப்பதில்லை. "நீ நூலைத் தேடு உன்னை உலகம் தேடும்" என்பார்கள். தேடல்கள் உள்ளவரை ஆற்றல்கள் வளரும், அறிவு கூர்மையடையும் எனவே தேடி வாசிக்க வேண்டும். பாடசாலைப் புத்தகத்தினை மட்டும் கற்றால் கிணற்றுத் தவளைகள் என்கின்றனர். சுவாசிப்பு எந்தளவு முக்கியமோ அதுபோல வாசிப்பு முக்கியம் என்கின்றனர். மாணவர்களின் அறியாமைக்கு காரணம் வாசிப் பின்மையேயாகும் என்கின்றனர்.

"ஒரு நூலகத்தினை உருவாக்குவதன் மூலம் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடிவிட முடியும்" என்கிறார்கள் அறிஞர்கள். வாசிப்பதன் மூலம் தர்க்கரீதியான விமர்சனக் கண்ணோட்டத்துடனான சிந்தனை வளரும் என்கின்றனர். ஆனால் ஏன் வாசிப்பு குறைந்துள்ளது? சில விடயங்கள் பற்றி கவனம் செலுத்துவோம்.

வாசிப்புக் குறைந்து செல்வதற்கான காரணங்களை எடுத்து நோக்குவோமாயின்,

1. தொலைக்காட்சி மோகம் முதற்காரணமாகும். தொலைக்காட்சி ஊடாகவும் பொதுஅறிவு, நாட்டுநடப்பு, அரசியல், பொருளாதார கலாசாரம் சம்பந்தப்பட்டவற்றை அறிய முடியும். ஆனால் இது இவற்றை மட்டுமன்றி தொடர்நாடகம் மற்றும் தேவையற்ற விடயங்களையும் ஒலிபரப்பி காலத்தினை வீணடிக்கின்றது. இவற்றைவிட கேபிள் தொலைக்காட்சி வேறு காணப்படுகிறது.

2. கணினி விளையாட்டுக்கள் வாசிப்பினைக் குறைக்கின்றது. கணினி அறிவினை வழங்கினாலும், வேலைப்பளுவினைக் குறைத்தாலும் மறுபுறம் கணினி விளையாட்டுக்கள் நேரத்தினை வீணடிக்கின்றன. வாசிப்பு மூலம் அறிஞர்களான ரூஸோ, அரிஸ்ரோட்டல், பெஸ்டோலஜி, பேகன் புரோபல், கார்லைல் காலத்தில் கணினி இருக்கவில்லை.

3. பொறுமைக்குறைவு வாசிப்பினை மழுங்கடிக்கிறது. வாசிப்பதற்கு பொறுமை மிக அவசியம். உலக மக்கள் யாவரும் இன்று ஏதோஒரு வகையில் இயந்திரமாக (வேலைப்பளு) இயங்கிக் கொண்டுள்ளனர்.

4. கையடக்கத் தொலைபேசிப் பாவனை வாசிப்பினை இல்லாமல் ஆக்குகிறது. இன்று வறியவர்கள், பணக்காரர்கள் சகலரிடமும் கையடக்கத் தொலைபேசி உள்ளது. தகவல் பரிமாற்றத்திற்கு இது இன்றியமையாதது. ஆனால் கையடக்கத் தொலைபேசியை தொலைபேசியாக மட்டுமன்றி பல விளையாட்டுக்களுக்கும் பயன்படுத்துகின்றனர். முன்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் யாழ்தேவி ரயிலில் ஏறியோர் புத்தகங்களுடன் ஏறுவர். வாசித்துக்கொண்டே பயணம் செய்வர். தற்போது தொலைபேசியில் விளையாட்டுக்களுடன் காலத்தைக் கழிக்கின்றனர். இது தொலைபேசித் தாண்டவகாலம். கையடக்கத் தொலைபேசிக்குள் இணைய இணைப்புக்கள்வேறு காணப்படுகின்றது.


5. ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்களுக்கு மாணவப்பருவம் முதல் கணினியின் நன்மை, தீமை பற்றியும், கையடக்கத் தொலைபேசியின் நன்மை, தீமை பற்றியும், தொலைக்காட்சியின் நன்மை, தீமை பற்றியும் மாணவர்கள் உணரும் வகையில் தெளிவுபடுத்த வேண்டும்.

6. டியூசன் கலாசாரம் வாசிப்பினைப் பாதித்துள்ளது. இன்று மாணவர்கள் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பரீட்சைகளில் தேற தனியார் வகுப்புக்களையே நாடுகின்றனர். இதனால் சொந்த வாசிப்பு இல்லை. ஓய்வும் இல்லை. ஓய்வு நேரத்தினை நாமே தேடிப்பெற வேண்டும்.

7. நூலகங்களுக்கும், நூல்களை வாங்குவதற்கும் போதிய நிதியின்மை, இதுபற்றி ஆர்வம் போதாமை. மக்களின் வாண்மை விருத்தியடைய புதிய நுட்பங்களை அறிய வாசிப்பு அவசியம் என்பதை உணர்ந்தும் பூரணமாக செயற்படுத்தப்படாமை இதற்கு காரணமாகும்.

எனவே மேற்கூறிய விடயங்களைப் பற்றி மாணவர்களுக்கு சிறுவயது முதல் உணர்த்துதல் வேண்டும். ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தெளிவுபடுத்த வேண்டும். இதனை ஆசிரியர்களும், பெற்றோர்களும் செய்வார்களா? தொடர்ந்தும் "வாசிப்புக் குறைந்துள்ளது" எனக் கூறப்போகிறார்களா? இதற்கு மாத்திரை கண்டுபிடிக்கப் போகிறார்களா?

ஆர். மகேஸ்வரன்,
சிரேஷ்ட துணை நூலகர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்



"நீ நூலைத் தேடு உன்னை உலகம் தேடும்" என்பார்கள். தேடல்கள் உள்ளவரை ஆற்றல்கள் வளரும், அறிவு கூர்மையடையும் எனவே தேடி வாசிக்க வேண்டும். பாடசாலைப் புத்தகத்தினை மட்டும் கற்றால் கிணற்றுத் தவளைகள் என்கின்றனர். சுவாசிப்பு எந்தளவு முக்கியமோ அதுபோல வாசிப்பு முக்கியம் என்கின்றனர். மாணவர்களின் அறியாமைக்கு காரணம் வாசிப்பின்மையேயாகும் என்கின்றனர். "ஒரு நூலகத்தினை உருவாக்குவதன் மூலம் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடிவிடமுடியும்" என்கிறார்கள் அறிஞர்கள். வாசிப்பதன் மூலம் தர்க்க ரீதியான விமர்சனக் கண்ணோட்டத்துடனான சிந்தனை வளரும் என்கின்றனர். ஆனால் ஏன் வாசிப்பு குறைந்துள்ளது?

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜூன் மாதம் 25ஆம் திகதி திங்கட்கிழமை

## பல்லின சமூக அமைப்பில் அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவம்

பல்லின சமூக அமைப்பில் அதிகாரப் பகிர்வு இல்லையேல் ஜனநாயகம் முழுமை பெறாது. பெரும்பான்மை சமூகத்தின் ஆதிக்கத்தையும், ஆதிக்க மனோபாவத்தையும் தவிர்ப்பதற்கு அதிகாரப் பகிர்வு அவசியமானது. அத்துடன் பகிரப்பட்ட அதிகா ரங்கள் பல மக்களைச் சென்றடைவதற்கு ஜனநாயகம் அவசியமானது. முன்னரெல்லாம் பல்லின சமூக அமைப்பைக் கொண்ட நாடுகளில் எரிநெருப்பாகிப் போன பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய அரசாங்கம் அமைக்கும் போக்குக் காணப்பட்டது. இன்று அந்த நிலைமை அருகி, அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதே புதிய போக்காக எழுச்சி பெற்று வருகிறது.

இலங்கையைச் சீரழித்த மூன்று தசாப்த கால யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்து விட்டன. இனப் பிரச்சினையே யுத்தத்தின் தோற்றுவாய். பிரச்சினையின் மூல காரணத்துக்கு முடிவு காணும் முயற்சியாகவே பாராளுமன்ற தெரிவுக்கமிட்டி யோசனை முன்வைக்கப்பட்டது. இருந்தும் இது தொடர்பாக அப்பட்டமான அரசியல் சந்தர்ப்பவாதச் செயற்பாடுகள் இடம்பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதற்காகவே ஏட்டிக்குப் போட்டியான, அர்த்தமற்ற வாதப்பிரதிவாதங்களும் முன்வைக்கப்படுகின்றன.

அர்த்தமற்ற இந்த வாதப்பிரதிவாதங்களைப் பார்க்கும்போது 1986ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட ஒரு வாய்த் தர்க்கம்தான் நினைவுக்கு வருகிறது. அப்போது தி.மு.க. உறுப்பினராக இருந்தார் வைகோ. குண்டு துளைக்காத மேலங்கிகளை இறக்குமதி செய்வது தொடர்பான பிரேரணை குறித்துப் பாராளுமன்றத்தில் பேசப்பட்டது. திடீரென எழுந்தார் வைகோ. "குண்டு துளைக்காத கீழங்கிகளையும் இறக்குமதி செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?" என்று கேள்வியெழுப்பினார் வைகோ. அப்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் ப.சிதம்பரம். யாரும் எதிர்பார்க்காத நிலையில் குறுக்கிட்டார் பிரதமர் ராஜீவ் காந்தி. "கௌரவ அங்கத்தவருக்குக் குண்டு துளைக்காதயங்கிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு உள்துறை அமைச்சரைக் கேட்கவுள்ளேன்" என்றார்.

"குண்டு துளைக்காத மேலங்கிகள் இன்றிக் குண்டு துளைக்காத கீழ் அங்கிகளைக் கொள்வனவு செய்வதால் என்ன பயன்?" என்று அப்பாவித்தனமாகக் கேட்டார் ஏ.பி. வாஜ்பாய். இவர் பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர். பின்னர் பிரதமராகப் பதவி வகித்தவரும் கூடபட்டென்று பதிலளித்தார் பிரதமர் ராஜீவ் காந்தி. "கௌரவ அங்கத்தவரின் கற்பைப் பாதுகாப்பதற்காகவே கீழங்கிகள் தேவைப் படுகின்றன" என்றாரே பார்க்கலாம். சபையே கொல்லெனச் சிரிப்பொலி யால் அதிர்ந்தது.

பாராளுமன்ற தெரிவுக் கமிட்டி குறித்துக் கேலி செய்யும் அரசியல்வாதிகளையும், சில ஊடகங்களையும் பார்க்கும்போது ராஜீவ் காந்தியின் 'நக்கல்' தான் நினைவுக்கு வருகிறது. சர்வ கட்சி மாநாடுகள், அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் கமிட்டிகள், அனைத்துக் கட்சி மாநாடுகள், இரு தரப்புப் பேச்சுவார்த்தை, முத்தரப்புப் பேச்சு வார்த்தை என்றெல்லாம் பல முயற்சிகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெறும் சந்திப்புகளோடும் கூட்டத் தொடர்களோடும் பயனேதுமின்றி முடிவடைந்த முயற்சிகளும் இருக்கின்றன. இடைக்கால அறிக்கை, இறுதி அறிக்கை என்றெல்லாம் வெறும் வார்த்தைச் சிலம்பம் ஆடிவிட்டு அடங்கிப்போன தீர்வு முயற்சிகளும் இருக்கின்றன. இவை கடந்த காலச் சம்பவங்கள். அதற்காக இனியும் இப்படித்தான் தீர்வு முயற்சிகள் இடம்பெறுமென்று வெறும் சாக்குப் போக்குகள் கூறுவது அர்த்தமற்றது. தீர்வு முயற்சிகளை ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் அக்கறையோடு செயற்பட வேண்டும்.

கோர யுத்தத்தின் விளைவுகளுக்கு அனைத்து இன மக்களுமே விலை கொடுத்திருக்கிறார்கள். யுத்தக் கொடூரத்தை எமது அடுத்த சந்ததி சந்திக்கக் கூடாது. இன்றே அதற்கு முற்றுப்புள்ளி வைத்தால் இன்றைய சந்ததியும் தப்பிப் பிழைக்கும்.

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைவதற்கு முன்னதாகவே நேச நாட்டு இராணுவ அணிகள் நாஸி ஜெர்மனியையும் அதன் கூட்டணி நாடுகளையும் தோற்கடிக்கும் நிலைமை உறுதியானபோது, வரலாற்று முக்கியத்துவம் மிக்க யால்ரா மாநாடு நடைபெற்றது. அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ற், ரஷ்ய அதிபர் ஜோசப் ஸ்டாலின், பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகிய மூவரும் இந்த மாநாட்டில் பங்குபற்றினர். இனியாவது ஐரோப்பாவில் இன்னொரு பேரழிவு மிக்க யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்கான முன்யோசனைகளை முன்வைத்து இணக்கமும் கண்டனர். இருந்தும் பனிப்போர் ஏற்படு வதை இந்த நாடுகளால் தவிர்க்க முடியாமல் போனது. பெர்லின் சுவர் பிரச்சினை போன்ற பல்வேறு நெருக்கடிகள் ஏற்படத்தான் செய்தன. போக்லாண்ட் மோதல் போன்று பல யுத்தங்களும் ஏற்பட்டன.

இலங்கையிலுள்ள சகல அரசியல் கட்சிகளும், சிவில் சமூகத்தினரும் இதனை ஒரு பாடமாகக் கொள்ளவேண்டும். இனியும் பிரச்சினைகள் ஏற்படாவண்ணம் நீடித்து நிலைக்கக்கூடிய இறுதித் தீர்மானம் எடுப்பதும், அதனை நடைமுறைப்படுத்துவதுமே சரியான முரண்பாட்டுத் தீர்வாக அமையும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219396, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# அதிகாரப் பகிர்வுக்கு பாராளுமன்ற தெரிவுக் கமிட்டி

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியொன்றினை அமைக்கும் யோசனை பல்வேறு தரப்புக்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. பாராளுமன்றமே சட்டவாக்க சபை. அத்துடன் செயலாற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அமைப்பு முறை, நீதித்துறை ஆகியவையே அரசாங்கத்தின் முக்கிய அங்கங்களாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பாராளுமன்றத் தெரிவுக்கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. 1991 இல் மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி நியமிக்கப்பட்டது. பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான கமிட்டியொன்றும்,1995-97 காலப்பகுதியில் செயற்பட்டது. இப்போது மீண்டும் பாராளுமன்றத் தெரிவுக்கமிட்டி யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. யுத்தம் முடிவுற்ற நிலையில், ஐக்கிய இலங்கைக்குள் இன சௌஜன்யத்தை ஏற்படுத்துவதற்கான முதல் முன்னோடி முயற்சியென இதனைக் கொள்ள முடியும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் நிலவிய சமாதான சூழல் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவுமே தோல்வியில் முடிந்திருக்கின்றன. பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பனவெல்லாம் கடந்த காலங்களில் கிழித்தெறியப்பட்டன.

1981 இல் அதிகாரப் பரவலாக்கத்துக்கான மாவட்ட சபை முறைமை தோல்வியில் முடிந்தது. 1984 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசின் சர்வகட்சி மாநாடும் வெறும் கண் துடைப்பாகவே முடிந்தது. 1985 இல் முன்னெடுக்கப்பட்ட திம்புப் பேச்சுவார்த்தை முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது. தமிழ்க் குழுக்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். வவுனியாவில் இடம்பெற்ற வன்செயல்களினால் இந்த முயற்சியும் சரித்திரத்தின் குப்பைக் கூடைக்குள் சங்கமமாகியது. 1980களில் ஜி.பார்த்தசாரதி, ரொமேஷ் பண்டாரி போன்ற இந்திய ஏற்பாட்டாளர்களின் முன்முயற்சியோடு அரசியல் கட்சிகளின் மாநாடு நடத்தப்பட்டது. 1987 இல் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியின் முன்முயற்சியோடு இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இது அதிகாரப் பரவலாக்கலுக்கான மாகாண சபை முறைமைக்கு வித்திட்டது. இந்த முறைமை கொண்டுவரப்பட்டது. இருந்தும் இதுவும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

1989-90 ஆம் வருடங்கள் ஜனாதிபதி பிரேமதாசா - புலிகள் பேச்சுவார்த்தை, 1989 இன் சர்வ கட்சி மாநாடு, 1994-95 இல் சந்திரிகா அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை, 2002-03 இல் இடம்பெற்ற ரணில்-புலிகள் பேச்சுவார்த்தை எல்லாமே வெறும் கானல் நீராகின. இருந்தாலும் 1986 இலும் 1988 இலும் தமிழ்மொழி உரிமைக்காக அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 1987 இல் மாகாணசபைக்கான 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 2006 ஆம் ஆண்டு சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

முன்பெல்லாம் பல தளங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்வு முயுற்சிகள் தோல்வி கண்டமைக்கு ஓர் அடிப்படைக் காரணம் இருக்கின்றது. தமிழர் தரப்புகளுக்குப் பின்னால் தீவிரவாத சக்திகள் உறுமின. மறுபுறத்தில் சிங்களக் கடும் கோட்பாட்டாளர்களின் அழுத்தங்களுக்கு அரசுகள் அடிபணிந்தன. யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. இந்தப் புதிய சூழலை அரசும் தமிழர் தரப்புக்களும் சரிவரப் பயன்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி அமைக்கும் யோசனையை காலம் கடத்தும் முயற்சியெனக் கூறித் தட்டிக் கழிக்க எடுக்கும் முயற்சி தவறானது. தமிழ் தேசியக் கூட்டமைப்புத் துணிந்து தனது நியாயமான யோசனைகளை முன்வைக்க வேண்டும்.

**எஸ்.அருளானந்தன்**

நடைமுறைச் சாத்தியமான யோசனைகளை முன்வைக்க வேண்டும்.

ஆயுதமேந்திய குழுக்கள் மோதிக் கொண்டிருந்த வடஅயர்லாந்தில் 1998 இல் மேற்கொள்ளப்பட்ட பெரிய வெள்ளிக்கிழமை ஒப்பந்தம் பெரும் திருப்பு முனையாக அமைந்தது. ஆயுதக் கையளிப்புக்கு இரண்டு வருடங்கள் காலக்கெடு விதிக்கப்பட்ட போதிலும், 2005 ஆம் ஆண்டளவிலேயே அங்கு சமாதானம் சாத்தியமாயிற்று. இந்தச் சமாதானத்தை உருவாக்குவதற்கு ஏற்பாட்டாளராகத் திகழ்ந்த அமெரிக்க செனட்டர் ஜோர்ஜ் மிச்செலின் பங்களிப்பு காத்திரமானது. "சகல சமூகங்களுக்கும் நீதியை வழங்கக்கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால், அந்த அணுகுமுறை நாட்டில் பல நன்மைகளைக் பெற்றுத் தரும்" என்று செனட்டர் ஜோர்ஜ் மிச்செல் அப்போது தெளிவுபடக் கூறியிருந்தார். இருந்தும்கூடி ஐ.ஆர்.ஏ போன்ற உதிரிக் குழுக்கள் 2009 ஆம் ஆண்டிலும் கூடத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன.


2006 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை தொடர்பாக விடுத்த அறிக்கையில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டது. 'மாகாண மட்டத்திலான அதிகாரப் பகிர்வு அல்லது மாகாண சபைகள், பிராந்திய மட்டத்திலான அதிகாரப் பகிர்வு அல்லது பிராந்திய சபைகள், அத்துடன் தேசிய மட்டத்திலான அதிகாரப் பகிர்வை வழங்கும் ஒரு சம்மேளம் என்ற எடுகோள் உட்பட பல சாத்தியமான முயற்சிகள் தொடர்ச்சியாகவே நிராகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் குறிப்பிட்டிருந்தது. சமஷ்டித் தீர்வு பற்றி ஆராயப் போவதாக டோக்கியோ பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொண்டு புலிகள் இயக்கம் பின்வாங்கியது. இந்த வரலாற்றுத் தவறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் விடக் கூடாது. மாகாண அல்லது பிராந்திய அதிகாரப் பகிர்வுக்கான அரசியலமைப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதநன் மூலம் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான முடியும்.

வடஅயர்லாந்தின் பெஸ்மாஸ்ற் ஒப்பந்தம், இந்தோனேசியாவின் ஆச்சே சமாதான ஒப்பந்தம், பங்களாதேஷில் சிட்டாகொங் மலைப்பகுதியில் பூர்வீகக் குடிகளுக்கும் - டாக்கா அரசுக்குமிடையிலான ஒப்பந்தம் ஆகியவை பேச்சுவார்த்தைகள் மூலம் ஈட்டப்பட்ட அண்மைக்கால சமாதானக் கனிகளாகும். போராட்டப் பின்புலத்தோடுதான் இந்தச் சமாதான ஒப்பந்தங்கள் ஈட்டப்பட்டன.

இலங்கையில் தனிநாட்டுக் கோரிக்கையும் அதற்கான ஆயுதப் போராட்டமும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நடைமுறைச் சாத்தியமான முறையில் தீர்வு முயற்சிகளுக்குக் கைகொடுக்க வேண்டும்.

வெறுமனே தமிழ் மக்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம் மக்களும் பாதிக்கப ட்டிருக்கின்றார்கள். எனவே இனரீதியான சௌஜன்யகத்துக்கு மாகாணங்களில் மட்டுமல்ல, மத்தியிலும்கூட அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும். மூன்று தசாப்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக்கும் கிழக்குக்கும் தேவையேற்பட்டால் சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும். பாராளுமன்ற தெரிவுக் கமிட்டி தரும் பொன்னான வாய்ப்பு தவறவிடப்படக் கூடாது.



## தமிழ் சினிமாவின் ஒரு மைல்கல்!

இன்று கொடிகட்டிப் பறக்கும் பாலா - அமிர் - சசிகுமார் - பாண்டிராஜ் என்று புதிய தலைமுறைக்கு வித்திட்ட இயக்குனர் பாலுமகேந்திரா குறித்த தொகுப்பு இது.

1946இல் இலங்கையில் பிறந்த பாலுமகேந்திரா, 1969இல் வட இந்தியாவின் புனே ஃபிலிம் இன்ஸ்டி டியூட்டில் ஒளிப்பதிவுத் துறையில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவராக வெளிவந்தார். முதலில் மலையாளப் படமான "நெல்லு" வில்(1971), ஒளிப்பதிவாளராகப் பணியாற்றினார். முதல் படத்திலேயே தேசிய விருது கிடைத்தது. பின் கன்னடத்தில் "கோகிலா"(1979) என்ற படத்தை இயக்கி, இயக்குனராகவும் தேசிய விருது பெற்றார். 1978ல் மகேந்திரன் இயக்கத்தில், "முள்ளும் மலரும்" படம் மூலம் பாலுமகேந்திரா தமிழில் ஒளிப்பதிவாளராக அறிமுகமானார். "அழியாத கோலங்கள்" (1979) இவர் இயக்குனராக செயல் பட்ட முதல் தமிழ்ப் படம்.

1977-ல் பாரதிராஜா இயக்கிய "பதினாறு வயதினிலே" தமிழ் சினிமா சரித்திரத்தில் திருப்பு முனைப் படமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அடுத்த வருடம் வெளிவந்த "முள்ளும் மலரும்" படமும் முக்கியமானதாக இன்றளவும் அறியப்படுகிறது. ஸ்டுடியோக்களுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த தமிழ் சினிமாவை முதன் முதலாக பாரதிராஜா தன் "பதினாறு வயதினிலே" மூலம் அசலான கிராமப்புறங்களை நோக்கி இட்டுச் சென்றார். கிராமத்து வாழ்க்கையில் காணக் கிடைக்கும் எளிய மனிதர்கள் மையக் கதாபாத்திரங்களாக உருக் கொண்டு வந்தனர். "முள்ளும் மலரும்" படத்திலும் "காளி" என்ற சராசரி மனிதனின் பிடிவாத குணத்தை மையப்படுத்தியே திரைக்கதை அமைக்கப் பட்டது. அதுவரை நட்சத்திர அந்தஸ்து வாய்க்கப் பெறாத ரஜினிகாந்த் என்ற துணை நடிகரே தன் பாத்திரப் படைப்புக்கு ஏற்றவர் என்று பிடிவாதமாகத் தயாரிப்பாளர்களிடம் சாதித்து தன் "முள்ளும் மலரும்" படத்தை இயக்கினார் மகேந்திரன். இவையெல்லாம் சந்தேகமின்றி தமிழ் சினிமாவின் எல்லைகளை விரிவுபடுத்திய முன்னோடி முயற்சிகள். அதேசமயம் இவையிரண்டையும் விட, இவற்றைத் தொடர்ந்து வந்த பாலுமகேந்திரா இயக்கிய "அழியாத கோலங்கள்" படத்திலேயே காட்சிமொழி நுட்பமாக முழுவீச்சில் செயல் படத் துவங்கியிருக்கிறது என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, இயக்கம் என மூன்று துறைகளிலும் தன் ஆளுமையை முழுமையாகச் செலுத்தி பாலுமகேந்திரா தன் திரைமொழியைப் படத்தினுள் அழுத்தமாக சாதித்துக் கொள்கிறார்.

சிறுவர்கள் முதல் முறை சிக்ரெட் புகைத்துப் பார்ப்பது, ஆற்றுக்குக் குளிக்கச் செல்லும் சிறுவர்களில் ஒருவன் மட்டும் மூழ்கி இறந்து விடுவது என நீண்டதொரு பட்டியல் நெஞ்சைத் தொடும். பாலு மகேந்திராவின் இந்தத் திரைமொழி சத்தயஜித் ரேவின் திரைமொழியிலிருந்து உருவாகிறது என்றே சொல்ல வேண்டும்.

1955- ல் தன் முதல் படமான "பத்தேர் பாஞ்சாலி" மூலம் பெங்காலி இயக்குனரான சத்யஜித் ரே, சினிமாவின், வாழ்வின், அழகியல் நிரம்பியதொரு திரைமொழியை உருவாக்கிக் காட்டினார். காட்சிக்குப் பின்னணியாக செயல்படும் இயற்கை, காட்சி ஓட்டத்தினூடே ஊடாடும் இயல்பான ஒளியமைப்பு, எந்த நிலையிலும் பதற்றம் கொண்டு விரைய முனையாத படத்தொகுப்பு, திரைக்கதையின் உணர்வு நிலைக்கேற்ப காட்சிப் படுத்தப்படும் பருவ நிலை மாற்றங்கள், வசன உச்சரிப்பு - உடல் மொழி என நடிப்பு சார்ந்த எந்த விரியத்தையும் தூக்கலாக்கிக் காட்டாமல் அவற்றை எளிமையாக்கி, நடிகர்களின் இயல்பு நிலையைக் காட்சிக்குள் தக்கவைத்துக் கொள்வது, இப்படி ரே உருவாக்கிய அந்தத் திரைமொழி உலகெங்கிலும் தோன்றிய பல இயக்குனர்களிடம் தன் பாதிப்பை செலுத்தத் துவங்கியது. அத்தககைய பாதிப்பின் அடிப்படையில் தமிழில் உருவாகி வந்த திரைமொழி பாலும கேந்தி ராவினு டையது. இதற்கான சாட்சியங்கள் பாலுமகேந்திரா இயக்கிய படங்களெங்கும் காணக் கிடைக்கின்றன. தமிழ் சினிமாவில் செயல்படத் துவங்கிய, சினிமாவின் அழகியல் கூறுகள் நிரம்பிய, முதல் நுட்பமான திரைமொழி இதுவே.

இப்படி பாலுமகேந்திரா தமிழுக்குப் பெற்றுக் கொடுத்த திரைமொழி மூலம் காட்டிய நடைமுறைச் சாத்தியங்களை அடிப்படையாகக் கொண்டு மணிரத்னம், பாலா, ராம் போன்ற இயக்குனர்கள் தமிழில் உருவாகி வந்தார்கள். இவர்கள் பாலுமகேந்திராவின் திரைமொழியை அப்படியே பின்பற்றவில்லை, அதன் அடிப்படைக் காரணிகளை மட்டும் எடுத்துக் கொண்டு தங்களுடைய ஒரு திரைமொழியைத் தங்கள் ஆளுமையின் போக்கிலும், தாம் உருவாக்க விரும்பும் சினிமாவின் வணிகத் தேவைக்கு ஏற்றபடியும், வளர்த்தெடுத்துக் கொண்டார்கள். அதுவே அவர்களை முக்கியமான இயக்குனர்களாக இன்று முன் நிறுத்தியிருக்கிறது.

முதல் படத்தில் துவங்கி இதுவரையில் 18 படங்களே பாலுமகேந்திராவால் இயக்க முடிந்திருக்கிறது. இந்த 18 படங்களிலும், "வீடு", "சந்தியாராகம்", என்ற இரண்டு படங்களில் மட்டுமே எந்தவித சமரசமுமின்றி தன்னால் முழுச் சுதந்திரத்துடன் இயங்க முடிந்திருக்கிறது என்று அவர் தன் பேட்டி ஒன்றில் பதிவு செய்திருக்கிறார்.

இனி எப்போதும் தமிழ் சினிமாவின் கலைத்தரம் பற்றி ஒருவர் பேசத் துவங்கினால், அதன் ஆரம்பப் புள்ளி, நுட்பமானதொரு திரைமொழியை அறிமுகப் படுத்தியவர், வணிகத்தைத் தாண்டி தீவிரமான கலை ஈடுபாடு காட்டியவர், என்ற வகையில் பாலுமகேந்திரா பற்றியே பேசுவதாக இருக்கும். தமிழ் சினிமாவில் பாலுமகேந்திரா அளவுக்கு வெற்றி பெற்ற இயக்குனர் இதுவரை வேறொருவர் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.




## சுனாமி அடித்துச் சென்ற யப்பான் பொருட்கள் 2014இல் அமெரிக்காவை சென்றடையும்

யப்பானில் சுனாமி அழித்த 20 மில்லியன் தொன் பொருட்கள் 2014 இல் கனடிய-அமெரிக்கக் கரைகளைச் சென்றடையும் என கூறப்படுகிறது. கடந்த வருடம் மார்ச் 2011இல் யப்பானை தாக்கிய பயங்கரமான சுனாமி அலையின் தாக்கத்தைப் பார்த்து உலகமே கவலையில் ஆழ்ந்தது. இயற்கையின் இந்தக் கோரத் தாக்குதலில் பல்லாயிரம் உயிர்களும் கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த சொத்துக்களும் அழிந்து நாசமாகின. இதில் உலக மக்களுக்கு அச்சமூட்டிய விடயம் யப்பானின் அணு உலைகள் சேதமான நிகழ்வே. உலகில் தொழில்நுட்பத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளின் பட்டியலில் யப்பான் முன்னணியில் உள்ளது.

அதன் விஞ்ஞான வளர்ச்சியை கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் யப்பான் அணு உலைகளின் மீது இயற்கையின் வலிய கரங்கள் தாக்குதல் நடத்தியதை யாராலும் தடுக்க முடியவில்லை.



இந்த அழிவிலிருந்து யப்பான் இப்பொழுது துரிதகதியில் மீண்டெழுந்து வருகின்றது. துரிதகதியில் மீண்டெழுந்து வருகின்றது.

ஆனால் மாபெரும் அழிவின் போது ஆழிப்பேரலை களால் அடித்து வாரிச் செல்லப்பட்ட பல்வேறு வகையான பொருட்கள், தமது பயணத்தைத் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

அந்தப் பொருட்களின் மொத்த நிறை 20 மில்லியன் தொன்களாகும். அவை இப்பொழுது கனடாவினதும் அமெரிக்காவினதும் மேற்குக் கடற்கரைகளை நோக்கி நகர்ந்து வருகின்றன.

ஹாவாய் தீவிலுள்ள பல்கலைக்கழகமொன்றின் ஆய்வாளரான ஜான் ஹஃப்னர் என்பவரின் கூற்றுப்படி, இப்பொருட்கள் 2014ல் கனடிய, அமெரிக்க கரைகளை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.


"இது சம்பந்தமாக பீதியடையத் தேவையில்லை. இவை வருவதை முன்கூட்டியே அறிந்திருப்பது நல்லது தானே?" என அவர் கூறியுள்ளார்.

இந்த சுனாமி சேதமடைந்த பொருட்கள் யப்பானிலி ருந்து 3,200 மைல் கடலில் மிதந்து செல்வதை, ர்ய பயிற்சிக் கப்பல் ஒன்று அவதானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

# பாதுகாப்பான வாழ்விடத்தை நோக்கி விட்டுச்செல்லப்பட்ட வளங்கள்



கதிரவன் கிழக்கில் உதயமாகின்றான், சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் மன மகிழ்வுடன், மலர்ந்த காலைப் பொழுதை வரவேற்கின்றனர். விவசாயிகள் தமது வயல்நிலங்களை நோக்கி விரைகின்றனர். முகத்தில் மலர்ந்த புன்னகையுடன் சீருடையை அணிந்த பள்ளிச் சிறார்கள் பாடசாலை நோக்கி புறப்படுகின்றனர். அன்றைய நாளில் தமது வர்த்தகத்தில் சந்திக்க வேண்டியுள்ள சவால்களை மனதைரியத்துடன் எதிர்கொள்ளும் வகையில் வர்த்தகத் தளங்களை நோக்கிச் செல்லும் வியாபாரிகள். இவர்கள் அனைவரையும் தமது நிலையங்களில் உரிய நேரத்தில் சென்றடைய உதவும் முகமாக, வீதி ஒழுங்கை மேற்கொள்ள ஏற்கனவே தயாராகியுள்ள பொலிஸார் போன்ற பல காட்சிகள் எம்மை மகிழ்வுறச் செய்தன. இவ்வனைத்து காட்சிகளையும் நாம் கண்டுமகிழ்சியுற்ற பிரதேசம், மூன்று வருடங்களுக்கு முன் இடம்பெற்ற கொடூர யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கிலேயேயாகும்.




30 வருடகாலமாக நிலைத்திருந்த கொடூர யுத்தத்தின் காரணமாக தமது நிம்மதியை இழந்து, வாழ்விடங்களை தொலைத்து, கொடிய வலையில் சிக்குண்ட பாசமிகு தமது பிள்ளை, நாளை உயிருடன் வாழ்வுவோமா? என்ற அச்சங்களுக்கும், அச்சுறுத்தளுக்கும் மத்தியில் வாழ்ந்த இம் மக்களுக்கு, தற்போது கிடைத்துள்ள நிம்மதியான வாழ்வு ஒரு வரப்பிரசாதமாகும் எனக் கூறுகின்றனர்.

2009 இல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டதை தொடர்ந்து, வடக்கு மற்றும் கிழக்கில் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் முதலியவற்றில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்லாது யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களுக்கு மீள்குடியமர்த்துவதை முக்கிய பொறுப்பாக கருதிய அரசாங்கம், அவ் நடவடிக்கையை குறுகிய காலத்தில் சிறந்த முறையில் மேற்கொண்டு, மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த பாரியளவு முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றது. அந்தவகையில் இம்மக்களை பாதுகாப்பான முறையில் குடியமர்த்துவதற்கு மிதிவெடியகழ்வுத் திட்டத்தை முன்னெடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

மிதிவெடியகழ்வானது நாட்டின் மீள்நிர்மாணம், அபிவிருத்தி மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்தல் போன்ற விடயங்களை முன்னெடுக்க மிகவும் அவசிய தேவைப்பாடாகத் திகழ்ந்தது. மிதிவெடிகளை அகற்றி நிலங்களை பாதுகாப்பானதாக மாற்றி மக்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தல் என்பது மிகவும் பொறுப்பானதும் கடினமானதுமான ஓர் செயற்பாடாகும். அதற்கமைய முதலில் மக்களின் வாழ்விடங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் மிதிவெடியகழ்வுகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது.

மிதிவெடியகழ்வுப் பணியென்பது மிகவும் எளிதான ஒரு காரியமல்ல. அது ஒரு ஆபத்தான, மிகுந்த கவனத்துடன் செய்யப்பட வேண்டிய ஒரு பணியாகும். சிறந்த திட்டமிடல், ஒத்துழைப்பு, நிபுணர்கள், பாரிய அளவவிலான இயந்திரங்களின் பயன்பாடுகள் மற்றும் சிறந்த போக்குவரத்துவசதிகள் என்பன அவசியமானவையாகும். இதைத்தவிர இப் பணியானது பாரிய செலவு மிக்கதாகும். 2010 யூலை மாதம் [illegible] மிதிவெடி செயற்பாட்டு மையம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.



யுத்தத்தின் பின்னரான தகவல்களின்படி ஏறத்தாள 4000 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்கு அதிகாமான நிலங்களில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் காட்டுப் பகுதிகளுக்கு மேலதிகமாக, மக்கள் வாழ்விடங்கள், பயிர்செய்கை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், வீதிகள், ரயில் ஓடுபாதைகள், நீர் நிலைகள் மற்றும் கடற்கரைகள் ஆகிய பிரதேசங்களிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்தில் இராணுவத்தினரும் மனிதாபிமான மிதிவெடியகழ்வுப் பிரிவினரும், பல அரசசார்பற்ற நிறுவனங்களும் ஈடுபட்டுவருகின்றன. இதில் மிக முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில், உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதா அபிவிருத்தித் திடட்ங்களுக்கு செலவிடப்படும் பணத்தைவிட மேலதிகமான

# மின்னும் தா… வடக்கின் ம…

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாணவர் படையணியில் வட மாகாண மாணவர்கள் மின்னும் தாரகைகளாக திறமைகளை வெளியிட்டமை அனைவரது பாராட்டையும் தட்டிச் செல்ல தவறவில்லை.

பாடசாலை மாணவர்களுக்கான மாணவர் படையணி 1881 ஆம் ஆண்டு கொழும்பு ரோயல் கல்லூரியின் அதிபர் ஜோன் பி கல் என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு 131 வருடங்களை கடந்துள்ளது.



ரன்தம்பேயில் அண்மையில் நடந்து முடிந்த மாணவர் பயிற்சித் திட்டம் கடந்த கால வரலாற்று பதிவுகளுடன் ஒப்பிடுகையில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது.


கடந்த 8ம் திகதி முதல் 15ம் திகதி வரையான காலப்பகுதியில் ரன்தெம்பேயிலுள்ள தேசிய மாணவர் படையணியின் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற விசேட பயிற்சிக்காக வடபகுதி பாடசாலைகளின் மாணவர் படையணியினரையும் தென்பகுதி பாடசாலைகளின் மாணவர் படையணியினரையும் ஒரே இடத்தில் சங்கமிக்க வைத்தமையாகும்.

இதன் மூலம் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள 25 பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகைதந்த 650 தமிழ் மாணவர்களும் குருநாகல் மாவட்டத்திலுள்ள 25 பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகைதந்த 650 சிங்கள மாணவர்களும் இன மத மொழி பேதங்களுக்கு அப்பால் ஒருவருக்கு ஒருவர் தத்தமது பலதரப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன் கலை கலாசாரம் மொழி பாரம்பரியம் ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றை சிறந்த முறையில் பரிமாறிக் கொண்டனர்.

இவர்களது பயிற்சிகளையும் அன்றாட செயற்பாடுகளையும் நேரில் கண்டவர்களுக்கு இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதாகவும் இனங்களுக்கு இடையிலான ஐக்கியம் ஒற்றுமை சமாதானம் மற்றும் சமத்துவத்தை வெளிப்படுத்துவதை உறுதி செய்வதாக அமைந்திருந்தது.

வடக்கில் பாரிய அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்துவரும் அரசாங்கத்தின் திட்டங்களின் வெற்றிப் பாதையின் மற்றுமொரு மைல் கல்லாக இது அமைகின்றது.பாடசாலை செல்லும் மாணவர்களை தாய் நாட்டுக்குச் சேவை செய்யும் நாளைய தலைவர்களாகவும் நற்குணமும் ஆர்வமும் உள்ள இளைஞர்களாகவும் மாற்றியமைப்பதே இந்த தேசிய மாணவர் படையணியின் பிரதான நோக்கமாகும். மேற்படி நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 1881 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாணவர் படையணியின் 14 படையணிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.இந்தப் படையணியின் மூலம் கிடைக்கப்பெறும் நற்பலன்களை தென்பகுதி மாணவர்கள் மாத்திரமே அனுபவித்து வந்த நிலையில் அதனை வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் முஸ்லிம் மாணவர்களும் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்குடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி மீடம் ஏறிய பின்னர் அவரது ஆலோசனைக்கமைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டலில் தற்போதைய பணிப்பாளர் மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தரவினால் 17 வது






பணம் மிதிவெடியகழ்வுகுக்கு செலவிடப்படுகின்றது.

தற்போது இந் நிலங்களில் 98.34மூ வீதத்திற்கு மேலதிகமான நிலங்களில் மிதிவெடியகழ்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள பிரதேசங்களும் மிக விரைவில் மிதிவெடிகள் அற்ற பாதுகாப்பான நிலங்களாக மாற்றப்படும்.


மிதிவெடிகள் அகற்றப்பட்ட பாதுகாப்பான நிலங்களில் 30மூ வீதமானவை இராணுவத்தினரால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. மிதிவெடிய கழ்வாளர்கள் ஆயிரக்கணக்கான கண்ணிவெடிகளையும், யூஎக்ஸ்ஓ வகைகளையும் இந் நடவடிக்கைகள் மூலம் மீட்டுள்ளனர்.

இலங்கையின் வினைத்திறனான மிதிவெடியகழ்வு நடவடிக்கை, உள்நாட்டு மட்டுமல்லாது சர்வதேச நிபுணர்களாளும் பாராட்டுக்களை பெற்றுக் கொண்டுள்ளது. மேலும் இப் பணியின் வெற்றிக்கு, உறுதிப் பாட்டுக்கு, ஒத்துழைப்புக்கு, அரசாங்கம் இதற்காக வழங்கிய முக்கியத்துவம், இதில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் ஒத்துழைப்பு போன்றவையே காரணமாக அமைந்தன. சர்வதேச சமூகம் இப்பணிக்கு மிகுந்த ஒத்துழைப்பு வழங்கியதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச பணியாளர்கள் தமது வளங்களையும், நிபுணர்களையும் பகிர்ந்து சிறந்த

**STATUS OF DEMINING AS OF 30 APRIL 2012**




## மிதிவெடியகழ்வுப் பணியென்பது மிகவும் எளிதான ஒரு காரியமல்ல. அது ஒரு ஆபத்தான, மிகுந்த கவனத்துடன் செய்யப்பட வேண்டிய ஒரு பணியாகும். சிறந்த திட்டமிடல், ஒத்துழைப்பு, நிபுணர்கள், பாரிய அளவவிலான இயந்திரங்களின் பயன்பாடுகள் மற்றும் சிறந்த போக்குவரத்துவசதிகள் என்பன அவசியமானவையாகும்.




முறையில் இந் நடவடிக்கையை முன்னெடுக்கின்றனர்.

மிதிவெடியகழ்வுப் பணிக்கு மேலதிகமாக மக்களுக்கு மிதிவெடி அபாயம் தொடர்பான அறிவூட்டல் பணிகளும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. முக்கியமாக பாடசாலை மாணவர்களுக்கும், மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்குமே இவ் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. இச் செயற்பாடானது தேசிய கல்வி முறை மூலமும் வெகுஜன ஊடகங்களை பயன்படுத்தியும் முன்னெடுக்கப்படுகின்றது. இதன்மூலம் பாரிய உயிரிழப்புக்களை தடுக்க முடியும். பொதுச் சுகாதார பாதுகாப்பு அமைப்பானது, மிதிவெடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பையும், ஆதரவையும் வழங்கிவருகின்றது. மிதிவெடியழ்வானது மக்களின் வாழ்கைப் பாதுகாப்பிற்கு இன்றியமையாத ஒன்றாகும்.

பழையதை மீண்டும், மீண்டும் நினைவூட்டாமல், தமது எதிர்காலத்தை செழிப்பூட்டுவதே எதிர்கால சந்ததியினரான பாடசலை மாணவர்களது நோக்காகவுள்ளது.




எனவே இதற்குரிய சிறந்த வாய்ப்பு இலங்கையில் உள்ளது. இலங்கை தற்போது இறைமையுள்ள சுகந்திரமான ஒரு நாடு. அனைத்தின மக்களும் சமவாய்ப்புடன் நிம்மதயாகவும், சந்தோசமாகவும், தத்தமது குடும்பங்க ளுடனும் வாழ்ந்து வருகின்ற உண்மையை இலங்கைக்கு வருகை தரும் எவரும் கண்கூடாக காணமுடியும்.

# ாரகைகளாக

# மாணவர்கள்!

படையணி அம்பாறையிலும் 18 வது பண்டயணி நுவரெலியாவிலும் 20 வது படையணி யாழ்ப்பாணத்திலும் 21 வது படையணி திருகோணமலையிலும் உருவாக்கப்பட்டது.

வடக்கிற்கு புதிதாக விஸ்தரிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள 20வது படையணியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் கிளிநொச்சி பாடசாலைகளைச் சேர்ந்த 650 தமிழ் மாணவர்களுக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பல்வேறு பட்ட உடற் பயிற்சிகளிலும் தற்காப்பு பயிற்சிகளிலும் ஈடுபட்டனர். வெண்ணிற ஆடை அணிந்து இது போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டமை காண்பதற்கு மிகவும் அழகாக காட்சியளித்தது. உடற்பயிற்சி வாள் பயிற்சி தேசப்படப் பயிற்சி தலைமைத்துவப் பயிற்சி இடர் முகாமைத்துவப் பயிற்சி நம்பிக்கை கட்டியெழுப்புதல் பயிற்சி நாடகப் பயிற்சி 0.22 ரக துப்பாக்கிப் பயிற்சி களப் பயிற்சி முதலுதவி மற்றும் மனித உரிமை போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அதேபோன்று விசேட அணிவகுப்பு பயிற்சிகளும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. கடந்த 15ம் திகதி ரன்தெம்பேயில் இடம்பெற்ற பிரியாவிடை வைபவத்தின் போது இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பின் போது மாணவர் படையணியின் யாழ்ப்பாணம் படையணிக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரி மேஜர் எச்.எம்.எச். பிலிபிடிய தலைமையில் கலந்து கொண்டனர்.

சிங்களம் தமிழ் மாணவர்கள் இருவருக்கும் மும்மொழிகளில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும். தமிழ் முஸ்லிம் அதிகாரிகள் விசேடமாக பயிற்றுவிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதேநேரம் வடபகுதி மாணவர்களும் அணிவகுப்பின் போது சிங்கள மொழிகளில் எவ்வித தயக்கமும் இன்றி கட்டளையிட்டதையும் காண முடிந்தது.

இதன் அடுத்த கட்டமாக முல்லைத்தீவு வவுனியா கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தேசிய மாணவர் படையணியின் 22 வது படையணி முல்லைத்தீவில் வெகுவிரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வடபகுதி பாடசாலைகளில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி 1047 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது. இவர்களுக்கு மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர் வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

1034.7 புள்ளிகளைப் பெற்று வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் 1028.3 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மூன்றாம் இடத்தையும் 936.5 புள்ளிகளைப் பெற்று கரவெட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் நான்காம் இடத்தையும் 942.8 புள்ளிகளைப் பெற்று





மல்லாகம் மகாவித்தியாலயம் ஐந்தாம் இடத்தையும் தட்டிக்கொண்டன.

இதேவேளை பல்வேறு கலை திறன்களை வெளிப்படுத்தல் உடற் திட சோதனை விடுதி சோதனை ஆகியவற்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலாம் இடத்தையும் அணி நடை திறன்கள் பரீட்சையில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும் தன்நம்பிக்கை விருத்தி சோதனையில் பளை ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும் பணிப்பாளரின் சோதனையில் சண்டிலிப்பாய இந்து கல்லூரி முதலாம் இடத்தையூம் பெற்றுக்கொண்டன.

அணி நடையில் சிறந்த கட்டளை இடும் அதிகாரியாக மல்லாகம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எல்வின் ஜேன்சும்இ தன்னம்பிக்கை விருத்தி ஓட்ட வீரனாக கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சிவனுஜனும்இ குறிபார்த்து சுடுதல் வீரனாக கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயம் மாணவன் சதீஷ்குமார் ஆகியோரும் தெரிவாகினர்.

இது போன்ற சிறந்த வாய்ப்புக்களை ஏற்படுத்தி தந்தமைக்காக மாணவர் படையணியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் அனைவரும் நன்றி தெரிவித்தனர்.

ஷெரீப்

# இந்திய சிறையிலிருந்து பதினைந்து இலங்கை மீனவர்கள் விடுதலை

## விரைவில் தாயகம் அழைத்து வர ஏற்பாடு

இந்தியாவில் கைது செய்யப் பட்டு சிறை வைக்கப்பட் டிருந்த 15 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள் ளனர். அவர்கள் விரைவில் இலங்கைக்கு அழைத்து வரப்படுவர் என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சு குறிப்பிட்டுளளது.

இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகிய பகுதிகளில் இந்த இலங்கை மீனவர்கள் கைது செய்யப் பட்டனர். இவர்கள் சிலாபம், திருகோணமலை, நீர்கொழும்பு ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்தவர்களாவர் இந்திய வெளிவிவகார அமைச்சின் உதவியுடன் இம்மீனவர்கள் இலங்கை க்கு அழைத்துவரப்படவுள ்ளனர். இதேவேளை, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் விடுதலை செய்யப் பட்ட நாகபட்டினம் -அக்கரை பேட்டை மீனவர்கள் 9 பேர் வீடு சென்றடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக கடலில் காற்றின் வேகம் அதிகமாக காணப்பட்டதால் தமிழக மீனவர்கள் இந்திய கடலோர காவல்படையிடம் ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

# டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உடனடி சிகிச்சை

டெங்கு காய்ச்சல் என சந்தேகிக்கப்படும் நோய் அறிகுறிகள் காணப்படும் குழந் தைகளுக்கு உடனடி சிகிச்சை களை வழங்க சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்திய சாலை விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள் ளது. அவ்வாறான நோய் அறிகுறிகள் காணப்படும் குழந்தைகளை வரிசையில் நிறுத்தாது உடனடி சிகிச்சை களை வழங்கவுள்ளதாக வைத்தியசாலையின் பாணிப் பாளர் டொக்டர் ரத்னசிறி ஏ ஹேவகே தெரிஷவித் துள்ளார். டெங்குநோய் அறிகுறிகள் காணப்படும் குழந்தைகளை அடையா-ளம் காண்பதற்கென வெளி நோயாளர் பிரிவில் விசேட குழுவொன்று நியமிக் கப்பட்டுள் ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் டெங்கு காய்ச் சலினால் பீடிக்கப்பட்ட குழந்தை களுக்கு சிகிச்சைகளை வழங்குவதற்கு விசேட தொழில் நுட்பத்துடன் கூடிய வாட்டுக் கள் தயார்ப்படுத்தப்பட்டுள் ளதாக அவர் கூறினார்

### கிழக்கு மாகாண விளையாட்டு விழா

# ஊடகவியலாளர்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரினார் எம்.எஸ். சுபைர்

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியலா ளர்கள் - விழா ஏற்பாட்டாளர் களினால் அவமதிக்கப்பட்ட மைக்கு மன்னிப்பு கோருவதாக கிழக்கு மாகாண விளையாட்டு துறை அமைச்சர் எம்.எஸ். சுபையிர் தெரிவித்தார். அட்டாளைச்சேனை கூட்டுறவு சங்க கூட்ட மண்டபத்தில் அமைச்சர்களான எம்.எஸ். உதுமாலெப்பை மற்றும் எம்.எஸ்.சுபையிர் ஆகியோர் கலந்து கொண்ட ஊடகவிய லாளர் சந்திப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.இச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மாகாண விளையாட் டுத்துறை அமைச்சர் சுபையிர் ஊடகவியலாளர் களிடம் மேற்கண்டவாறு பகிரங்க மன்னிப்பினைக் கோரினார்.

இவ்விவகாரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் "கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பையின் வேண்டுகோளுக்கு இணங் கவே மாகாண விளையாட்டு விழாவினை இம்முறை அட்டாளைச்சேனையில் நடத்துகின்றோம். விளையாட்டு விழாவினை நடத்துவதற்கு அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரி கள் பணிக்கப்பட்டுள்ளனர். இவர்களினால் விடப்பட்ட தவறுகளின் காரணமாக - சில ஊடகவிய லாளர்களுக்கு உரிய வகையில் அழைப்பிதழ் களும் கிடைக்க வில்லை.

அதேபோன்று, ஊடகவி யலாளர்கள் விளையாட்டு விழாவின் போது, அவமதிப்புக் குள்ளானதா கவும் தெரிவிக்கப்படுகி றது.

எனவே, இவை தொடர் பில் எனது வருத்தத் தினைத் தெரிவிப்பதோடு, இதற்காக ஊடகவியலாளர் களாகிய உங்களிடம் எனது மன்னிப்பினையும் கோருகின்றேன்" என்றார்.

# மனித மனங்களில் நடைபெறும் உள்ளார்ந்த யுத்தத்தை எப்படி நிறுத்தப்போகின்றோம்?

### தேசிய சர்வமத மாநாட்டில் தமிழ் நேசன் அடிகளார்


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" அதாவது "எல்லா ஊரும் என்னுடைய ஊரே, எல்லா மக்களும் என்னுடைய உறவினரே" என்றார் சங்கப்புலவர் கணியன் பூங்குன் றனார்."எல்லோரும் இன்புற்றிருப் பதன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே" என்று இறைவனைப் பணி கின்றார் தாயுமானவர். "உன்னைப்போல் உன் அயலா னையும் நேசி" என்பது இயேசுவின் வார்த்தையானாலும் இதுவே அனைத்து மதங்களிலும் எதி-ரொலிக்கின்ற மிக உயர்ந்த மானிட தத்துமாக இன்றுவரை விளங்குகின்றது.

உலகத்திலே இருக்கக்கூடிய நான்கு உயர்ந்த மதங்க ளைக் கொண்டது இந்த நாடு. இப்படிப் பட்ட ஒரு நாட்டில்தான் வன்முறை களும், அநீதிகளும், பாரபட்சங்க ளும் இன்றுவரை தொடர்கதை யாக உள்ளன. இந்த மதங்களின் போதனைகளும், படிப்பினைகளும் தோற்றுப்போய்விட்டனவா என்ற கேள்வி இன்று எழுகின்றது. நிச்சயமாக இது மதங்களின் தோல்வி அல்ல; மாறாக மதங்க ளைப் பின்பற்றுகின்றவர்களின் தோல்விதான்.

இன்று மதங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக-ளால் - குறிப்பாக சிறுபான்மை மதங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் கள் போன்றவற்றால் - இந்த நாட்டில் மதவாதம் தலை தூக்கி உள்ளதோ என்ற அச்சம், ஐயம், ஆதங்கம் நல்மனம் கொண்ட அனைவர் மத்தியிலும் ஏற்பட்டுள் ளது. இப்படியான ஒரு சூழ்நிலை யில் மதத்தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்களாகிய நாம் நமது வாழ்வை, நமது செயற்பாடு களை மீள்பரிசீலனை செய்ய வேண்டியவர்களாக, சுய விமர்ச னத்திற்கு உள்ளாக்க வேண்டிய வர்களாக உள்ளோம்.

இன்று யுத்தம் முடிவடைந்து விட்டது என்று சொல்லப்பட்டாலும் யுத்தத்தின் சத்தங்கள் மட்டும்தான் இன்று இல்லை. துப்பாக்கி வேட்டுக்கள் இன்று ஓய்ந்துள்ளன. ஆனால் இன்னமும் ஓர் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டி ருக்கிறது. அதுதான் உள்ளார்ந்த யுத்தம், மனித மனங்களில் நடை-பெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் எப்படி? எப்போது? நிறுத்தப்போகின்றோம்?. எரிமலை ஒன்றை வெளியிலி ருந்து பார்த்தால் அது அமைத-ியாக, சாதாரணமாகவே நமக்குத் தெரியும். ஆனால் அது உள்ளே கனன்று கொண்டிருக்கும்; குமுறிக்கொண் டிருக்கும். இப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் இன்று இந்த நாடு இருக்கின்றது; இந்த நாட்டின் மதங்கள், இனங்கள் இருக்கின் றன; தனி மனிதர்கள் இருக்கின் றனர்

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே தெளி வுண்டாகும்." என்று பாடினான் மகாகவி பாரதி. இதைத்தான் இயேசுபெருமானும் சொன்னார், "உள்ளத்தின் நிறைவிலிருந்தே வாய் பேசும்" என்று. சமாதானம் என்பது வெளியிலிருந்து வருவதல்ல. அது உள்ளிருந்து வருவது; உள்ளத்திலிருந்து வருவது! உள்ளத் தில் எது இருக்கின் றதோ அதுவே உதட்டிலும் வெளிப்படும். அதுவே செயல்களிலும் எதிரொலிக்கும்.







அண்மையில் கொழும்பு 05 ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மன்திரய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய சர்வமத மாநாட்டில் எடுத்த படம்.




**“குருநாதா!** நாம் ஒரு ஓலைச் சுவடி பத்திரிகை ஆரம்பித்தால் என்ன?” என்று கேட்டான் முட்டாள்.

“பத்திரிகையா? அதனால் நமக்கு என்ன லாபம்” என்றார் பரமார்த்தர்.

“தினம் தினம் நம்மைப் பற்றிப் புகழ்ந்து எழுதிக் கொள்ளலாம். நமக்குப் பிடிக்காதவர் களை விருப்பம் போல் திட்டலாம்” என்றான் மூடன்.

“அப்படியானால் நம் பத்திரிகைக்குத் “தினப் புளுகு” என்று பெயர் வைக்கலாம்” என்றார் குரு.

அன்று முதல் பரமார்த்தரின் மடம், பத்திரிகை அலுவலகம் ஆயிற்று. பரமார்த்தர், “தினப் புளுகு” நாளிதழின் ஆசிரியராக பதவி ஏற்றுக்கொண்டார். மட்டியும் மடையனும் நிருபர்களாக நியமிக்கப்பட்டனர்.

இருட்டத் தொடங்கியதும், நிருபர்களான மட்டியும் மடையனும் வெளியே புறப்பட்டனர். அப்போது அந்த நாட்டு அரசன், நகர சோதனை செய்வதற்காக மாறு வேடத்தில் புறப்பட்டான்.

அதைக் கண்ட மட்டி, “அரசர் ஏன் மாறு வேடத்தில் போகிறார்?” என்று கேட்டான். “திருடுவதற்காக இருக்கும்” என்றான் மடையன்.

“ஒவ்வொரு வீடாக எட்டிப் பார்க்கிறாரே, ஏன்?” என்று சந்தேகம் கொண்டான், மட்டி.

“எந்த வீட்டில் கொள்ளையடிக்கலாம் எனத் திட்டம் தீட்டுகிறார்” என்று விளக்கினான், மடையன்

“அப்படியானால் இதைச் சும்மா விடக் கூடாது. முதல் பக்கத்திலேயே பெரிதாக எழுத வேண்டும்” என்றான் மட்டி.

மடத்துக்கு வந்ததும், திரட்டி வந்த செய்திகளை எழுதத் தொடங்கினார்கள்.

வேலியே பயிரை மேய்கிறது! பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்க அரசரே திட்டம்! இரவு நேரத்தில், மாறு வேடத்தில் ஒவ்வொரு வீடாக எட்டிப் பார்த்தார். இந்தத் தலைப்பின் கீழ், அரசரைக் கண்டபடி தாக்கி எழுதினார்கள்.

“அரசு பணத்தில் அட்டகாசம்! தளபதி தம்புசாமி குடித்துவிட்டுக் கலாட்டா!

“அறிவுகெட்ட அமைச்சர் அப்புசாமி, ஆறு கட்டு சுருட்டு லஞ்சம் வாங்கினார்!”

“ஊழலோ ஊழல்! மந்திரி மலர்வண்ணன் மாடி வீடு கட்டிய மர்மம் என்ன?”




“இளவரசர் இந்திரனின் லீலை! இளம் பெண்ணின் கையைப் பிடித்திழுத்து வம்பு!”

இதேபோல தங்களுக்குப் பிடிக்காதவர்களை எல்லாம் விருப்பம் போல் தாக்கி எழுதினார்கள்.

“நம்மைப் பற்றிக் கொஞ்சம் புகழ்ந்து எழுதிக் கொள்வோமே!” என்றான் முட்டாள். “என்ன எழுதுவது?” எனக் கேட்டான் மூடன்.

சுருட்டு மன்னர் பரமார்த்தரின் சாதனை! ஒரே நாளில் தொடர்ந்து முப்பது சுருட்டு பிடித்தார்! என்று எழுதினான், முட்டாள்.

“மண்ணில் புரளுவது எப்படி?” என்ற தலைப்பில் மண்ணில் புரளுவதால் உடல் நலம் ஏற்படும் எனப் பேட்டி கொடுத்தான் மட்டி.

“தொப்பை வளர்ப்பது எப்படி?” என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை “அறிவியல்” பகுதியில் எழுதினார் பரமார்த்தர்.

“பரமார்த்தருக்குச் சிலை! மக்கள் போராட்டம்! “தத்துவத் தந்தை” பரமார்த்த குருவுக்கும், அவரது சீடர்களுக்கும் சிலை வைக்க வேண்டும் என்று கோரி மக்கள் போராட்டம் நடத்தினார்கள். இந்தச் சிலையை அரண்மனைக்கு எதிரேதான் வைக்க வேண்டும் என்றும் மக்கள் கோசமிட்டபடி ஊர்வலம் சென்றார்கள்!” இதே போல் ஒவ்வொருவருக்கும் தங்களைப் பற்றிக் கண்டபடி கிறுக்கி வைத்தனர்.

எல்லாவற்றையும் கொண்டுபோய்ப் பரமார்த்தரிடம் கொடுத்ததும், “எல்லாம் நன்றாகத்தான் எழுதியிருப்பீர்கள். விடிந்ததும் விற்றுவிட்டு வாருங்கள்” என்று கூறிவிட்டுப் படுத்துவிட்டார்.

பொழுது விடிந்ததும், சீடர்கள் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டு விற்கப் போனார்கள்.

“தினப் புளுகு வாங்கலையோ, தினப் புளுகு! நாலு பக்கம் நாற்பது காசு!” என்று கத்தினான் முட்டாள்.

சிலர் ஓடிவந்து ஓலையில் எழுதப்பட்ட பத்திரி-கயை வாங்கிப் பார்த்தனர்.செய்திகளைப் படித்துவிட்டு அதிர்ச்சி அடைந்தனர். செய்தி, அரசருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் எட்டியது. நீதி தவறாத மன்னனைப் பற்றியும், அவனது மந்திரிகளைக் குறித்தும் கண்டபடி தவறாக எழுதியதற்காகப் பரமார்த்தர் மீதும், சீடர்கள் மீதும் “குற்றப் பத்திரிகை” வாசிக்கப்பட்டது.

“பரமார்த்தரோ, “இதெல்லாம் உண்மை என்று யார் சொன்னது? பத்திரிகையின் பெயரைப் பாருங்கள்., “தினப் புளுகு” என்று தானே போட்டிருக்கிறோம்” என்று கூறினார்.

அதன் பின் குருவும் சீடர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

# காகம் ஒரு புத்திசாலிப் பறவை!




காகம் என்றால் கறுப்பு என்பது பொதுவான கருதுகோள். எனினும் காகம் பறவைகளிலே புத்திக் கூர்மையானது. இது மக்கள் வாழும் இடங்களில் அதிகமாக வாழ்கிறது.

இந்தப் பறவையை மிக இலகுவாகப் பயிற்றுவிக்க முடியும். பயிற்சி கொடுத்து சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்த முடியும். இதனால் இவற்றைச் செல்லப்பறவைகளாக வளர்ப்பது சில நாடுகளில் சட்டவிரோதமானதாகும்.

இப் பறவை அதிகம் சத்தம் எழுப்பிக்கொண்டிருப்பது. மரக்கிளையில் இருந்துகொண்டு தொடராகக் கரையும். ஒரு தொடரில் விரைவாக அடுத்தடுத்து மூன்று அல்லது நான்கு முறை ஒலியெழுப்பும், அடுத்தடுத்த தொடர்களிடையே சிறிது இடைவெளியிருக்கும்.

எல்லாவித அழுகும் உடல்களையும் தின்னும் வழக்கமுள்ளதாயினும், அதனால் பிடிக்கக்கூடிய சிறிய விலங்குகளைக் கொன்றும் தின்னக்கூடியது, அத்துடன் முட்டைகளைத் திருடித் தின்பதையும் வழக்கமாகக் கொண்டது. காகங்கள் இயற்கையில் சுத்திகரிப்பாளர்களாக உள்ளன. இதனால் மனிதர்களுக்கு பேருதவி புரிகின்றன.

## மாமிசம் உண்ணும் தாவரம்



இயற்கை உலகின் அதிசயம். இந்த தாவரம் பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் உள்ளது. இதன் தண்டு, நான்கு அடி உயரம் வரை வளரும். விக்டோரியா மலை சரிவுகளில் பெரும் புதர்களுக்கு மத்தியில் மட்டுமே இந்த செடி வளர்கிறது. இது “நேபன்தஸ் அட்டன்பரோகி” என அழைக்கப்படுகிறது.


இந்த செடியின் இலைகள் தான், அதற்கு வாய் போல் உள்ளது. அதன் மேல் அமரும் எலி போன்றவற்றை அப்படியே பிடித்துக் கொள்கிறது. இலையில் சுரக்கும் ஒருவித வழுவழுப்பான திரவத்திலிருந்து எலிகள் தப்ப முடியாது. பின்னர், அத் திரவமே எலிகளைக் கொன்று விடுகிறது. எலிகள் மட்டுமல்ல, பூச்சிகள் போன்ற சிறிய உயிரினங்களையும் இந்த தாவரம் விழுங்கிவிடும். தாவர இயலில் இந்த மாமிசம் உண்ணும் தாவரத்தின் கண்டுபிடிப்பு மிக முக்கியமானது. கேம்பிரிட்ஜ் பல்கலைகழக தாவரவியல் பேராசிரியர் இதனைக் கண்டுபிடித்தார்.

## சுடோக்கு எண் வரிசை!


ஒரு வரிசையில் 1முதல் 9 வரையான எண்களால் நிரப்ப வேண்டும். ஒரு எண் இரண்டு தடவை வருதல் கூடாது..

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 | | | 4 | |
| 2 | | | 4 | | | 3 | 6 | |
| | | | | 2 | | | 8 | |
| 7 | | | | | 8 | 6 | | |
| 8 | 6 | 3 | | | | 5 | 2 | 4 |
| | | 5 | 6 | | | | | 8 |
| | 7 | | | 3 | | | | |
| | 8 | 6 | | | 7 | | | 1 |
| | 9 | | | 8 | | | | |

## வண்ணம் தீட்டுங்கள்



எந்த சிலிண்டரில் முதலாவதாக காஸ் நிரப்பப் போகிறார்?




## குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

விடயம் 1, 2, 3 இல் ஏதாவதொன்றை பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், முகவரி, பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். முகவரி :

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# பாமர மக்களின் பாடல்களே நாட்டார் இலக்கியம்

## இலங்கை முஸ்லிம்களின் நாட்டார் இலக்கியமும் பண்பாடும்

எஸ். முத்துமீரான்

மக்கள் உள்ளங்களிலும், நினைவிலும், நாவிலும் இயல்பாகவே பிறந்து, எழுத்து வடிவம் காணாது!! வாய் மொழியாகவே பயின்று வருகின்ற நாட்டார் இலக்கியங்கள் பாடல்களாகவும், கதைகளாகவும், பழமொழிகளாகவும், விடுகதைகளாகவும் உள்ளன. ஒவ்வொரு மொழியின் ஆதி இலக்கியம் நாட்டார் இலக்கியமே ஆகும். நாட்டார் இலக்கியங்களின் மூலவடிவத்தை யாரும் கண்டதில்லை. உலகப் பொதுச் சொத்தாகிவிட்ட நாட்டார் இலக்கியங்களின் வேறுபாட்டைக் கண்டு, அவைகளின் உண்மைத் தன்மையை யாரினாலும்



அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாதுள்ளது.

ஒரு மொழியானது வரி வடிவம், இலக்கியம், இலக்கணம் இவற்றைப் பெறுவதற்கு முன்பு, நாட்டார் பாடல்கள் எழுத்தறிவில்லா ஏழைக் கிராமத்து மக்களிடம் வாய் மொழியாக வழங்கிவரும் நீண்ட வரலாற்றினை உடையனவாகும். வாய்மொழி இலக்கியத்திற்கும் எழுத்து வடிவேற்ற செம்மொழி இலக்கியத்திற்கும் அசைக்க முடியாத ஆழமான தொடர்பு உண்டு. நாட்டார் இலக்கிய ஆய்வாளர்களும், அறிஞர்களும் நாட்டார் பாடல்களைத் தாயென்றும் எழுத்திலக்கியத்தைச் சேயென்றும் வர்ணிப்பார்கள்.

மொழிக்கும், வாழ்க்கைக்கும், இலக்கியத்திற்கும், இலக்கணம் வகுத்த தொல்காப்பியத்திற்கும் முற்பட்ட காலத்தில் இலக்கியங்கள் மட்டுமின்றி, நாட்டார் பாடல்களும் இருந்ததாக எல்லா நாட்டார் இலக்கிய ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். முது பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் நாட்டார் பாடல்கள் தொல்காப்பியரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியர் நாட்டார் பாடல்களின் அமைப்பிற்கு எண்வகை வனப்பினுள் 'புலன்' என்னும் வனப்பு பொருந்துவதாகக் காட்டியுள்ளார்.

'தெரிந்த மொழியாற்
செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது
குறித்தது தோன்றிற்
புலனென மொழிய
புலனுணர்ந்தோரோ
(தொல்.செய்.233)

மேற்சொன்ன இந்நூற் பாவிற்கு இளம்பூரணர் உரையில் 'வழக்குச் சொல்லினானே தொகுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவது புலனென்னுஞ் செய்யுளாம் என்றவாறு' என்று எழுதியுள்ளார். இவ்வுரை நாட்டார் பாடலின் அமைப்பிற்குப் பொருந்துவதாக உள்ளதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

நாட்டார் பாடல்கள் நல்ல செல்வாக்கைப் பெற்ற காலம் சிலப்பதிகார காலம் என்று நாட்டார் இலக்கிய ஆய்வாளர்கள் ஆய்ந்துரைத்துள்ளனர். ஏழைப் பாமர மக்களின் பாடல்களாக இருந்த இப்பாடல்கள், இலக்கியங்களில் சிறப்பான இடம்பெற்ற காலம் இக்காலமேயாகும். சிலப்பதிகாரத்தில் காணப்படும் கானல்வரி, வள்ளைப் பாட்டு, வேட்டுவரி, ஆய்ச்சியர் குரவை, அம்மானைவரி ஆகியவை நாட்டார் தன்மையிலிருந்து இலக்கியம் உருவம் பெற்றன என்று கூறுவார்கள். நாட்டார் பாடல்களில் ஒன்றான ஒப்பாரியை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இடம்பெறச் செய்து, பாமரமக்களின் பாடல்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார். நாட்டார் பாடற் பிரிவில் தாலாட்டுப் பாடல்களை தன் பாடல்களில் பெரியாழ்வாரும், கம்பர மாயணத்தில் இராவணன் இறந்தபின் மண்டோதரியின் புலம்பலிலும், கச்சியப்ப முனிவர் கந்தபுராணத்தில் மன்மதன் இறந்தபின் இரதியின் புலம்பலிலும் ஒப்பாரியினை அழகுறக் காட்டியுள்ளார்கள். நாட்டார் பாடல்களைப் பாடியவர்கள் யார் என்று தெரியாவிட்டாலும், இன்று அவைகள் உலகில் இடம்பெறும் எல்லா இடங்களிலும், எல்லா நிகழ்வுகளிலும் இடம்பிடித்து ஆட்சி செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கடின உழைப்பின் துயரத்தை மறப்பதற்கும், காதல், அன்பு, மகிழ்ச்சி போன்ற உணர்வுகளை வெளியிடவும், துன்ப நிகழ்வுகளை வெளித்தள்ளி மனச் சுமைகளை இறக்கி வைத்து விடவும், கவலைகளை வெளிக்காட்டி ஆறுதல் பெறவும், கைக்குழந்தைகளைத் தூங்க வைத்திடவும் கிராமத்துப் படிக்காத ஏழைப் பராமரமக்கள் தாமாகவே உள்ளத்து உணர்வுகளை வாய்விட்டு இசையோடு பாடும் பாடல்களே நாட்டார் பாடல்கள் என வழங்கப் படுகின்றன. ஒரு சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, வரலாறு பற்றி அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுக்களும், புதை பொருட்களும் எவ்வாறு உதவுகின்றனவோ அவ்வாறே நாட்டார் இலக்கியங்களும், உதவுகின்றன.

"நாட்டார் பாடல்கள் எளியவை, பகட்டில்லாதவை, பொய்க் கலப்பற்றவை, நேரானவை, உள்ளத்தை ஈர்க்கும் இனிமையும், இசையொலியும் நிறைந்தவை, செழுமைமிக்க மனோபலமும், கற்பிக்கப்பட்டதாக கட்டுப்பாடற்ற கற்பனையும் நிறைந்த களஞ்சியங்கள் அவைகள். தீங்கற்ற கலைக் கருவூலங்கள் என்றே அவற்றைக் கூறலாம்" என்று வியந்துரைத்துள்ளார் நாட்டுப்புற ஆய்வாளர் திரு. அன்னாகாமு.

மேலும் "உலகெங்கிலுமுள்ள நாட்டார் பாடல்களை ஊன்றிப் பார்த்தால் வால்மீகி, கம்பன், இளங்கோ, காளிதாசன், சேக்ஷ்பியர், மில்டன், வோர்ட்ஸ்வொர்த், தாகூர் போன்ற உலகக் கவிஞர்களின் உள்ளங்களில் கவிதை வித்திட்டு அவர்களின் கவிதையெழில் செழிக்க உரமானது அவைகளே என்பதை உணரலாம். தாய்மார்களின் தாலாட்டுக்கள் அவர்களின் மனங்களில் அடைபட்டிருந்த கவிதை ஊற்றைத் திறந்திருக்க வேண்டும். அவர்களின் கவிதைகளில் நயமானவற்றை எடுத்துச் சில கற்பனை நிறைந்த நாட்டுப் பாடல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அவை தெரியவரும்" என்று ஆய்ந்து கூறுவார் ஆய்வாளர் ஆர். அய்யாச்சாமி.



பண்பாடு என்றால் என்ன?

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையின் வெளிப்பாடே பண்பாடாகும். வாழ்க்கை அமைப்பு என்பது அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், கலைகள், இலக்கியங்கள் முதலியவற்றால் அறியப் படுகிறது. சுருங்கக் கூறின் பண்பாடென்பது ஒரு தலைமுறை யினர், சென்ற தலைமுறையினரிடம் பெற்றுக் கொண்ட வாழ்க்கை முறையாகும்.

இங்கே, ஈழத்து நாட்டார் இலக்கியங்களினூடே இங்கு வாழ்ந்த மக்களின் பண்பாட்டை ஆய்வுக்கு உட்படுத்தி வெளிக் கொணர்வதில் மகிழ்ச்சி யடைகிறேன். விவசாயத் தொழிலும் இம்மக்களின் வாழ்வியலும் இடம்பெற்ற சில பாடல்களைப் பார்ப்போம்.

01. இம்மக்கள் எருமை மாடுகளைக் கொண்டே தங்கள் வயல்களை பண்படுத்தினார்கள். இப்படி வயல் மிதிக்கும் போது இவர்களால் பாடப்பட்ட நாட்டார் பாடல் இது.

**ஓஹோ!.... ஓ!!.... ஓ!!...**
**ஓடி நடந்திருங்க கண்டச் செல்லானே.**
**உறுதியுள்ள காலாலே-என்ர கண்டச் செல்லானே....**
**சார்பார்த்து நடந்திரனும் - என்ர கண்டச் செல்லானே - நீங்க**
**சாரோடு வந்திரனும் - என்ர கண்டச் செல்லானே...**
**இந்த நடைநடந்து - என்ர கண்டச் செல்லானே - நாம**



**எப்பதான் சேருவதோ - என்ர கண்டச் செல்லானே**
**ஓஹோ!... ஓ!!... ஓ!!...**
**ஓடி நடந்திருங்க கண்டச் செல்லானே...**

(பாடல் உதவி: மர்ஹூம் முகைதீன் வாவா (புனைப்பெயர்: மயாறு) நிந்தவூர் விவசாயி. வயது 80)

02. மேலும் இவர்கள் வயல்களில் சூடு மிதிக்கும் போதும் எருமை மாடுகளைக் கொண்டே மிதித்தார்கள். அவ்வேளைகளில் பாடப்பட்ட நாட்டார் பாடல் இது. இவர்கள் இப்பாடல்களை இனிய இசையோடு பாடுவார்கள்.

**ஓ!... ஓ!ஹோ... !!! ஓ!...**
**கடகத்திற்கே மூணுடா**
**கைப்பெட்டிக்க ரெண்டுடா**
**ஆகப்போக அஞ்சிரா - இப்ப**
**அவசரமா நடங்கடா...!**
**போடி படுக்காண்டா பறனிலே...**
**பொலியப் பெருக்கியே நடங்கடா!**
**களமெல்லாம் பொலி நல்லா நெறயனும் - ஒழுப்புளம்**
**காலால் மிதித்து நடங்கடா...**
**கட்டக் கூளன வெட்டிக் கழிச்சி - எங்கிட**
**கக்கிசமெல்லாம் ஒழிஞ்சிர நடங்கடா...**
**ஓ!...ஓஹோ!!...ஓ!...**
**அல்லாவை நம்பியே - நாங்க**
**அடிக்கிறம் சூட்டயிம்...**
**பொலியிம் பெருகிட- தம்பிகாள்**
**போங்கடா நீங்களும் கெதியாக...**
**ஓ!...ஓஹோ!!...ஓ!...**

(பாடல் உதவி: சிக்கந்தர் லெவ்வை சின்னத்தம்பி விவசாயி - வயது - 85 நிந்தவூர்)

மேற்சொன்ன பாடல்களின் மூலமாக இம்மக்களின் விவசாயப் பண்பாட்டு முறைகளையும், இவர்களின் வாழ்வியலையும் சிறப்பாக புரிந்து கொள்ளலாம்.

03. இங்கே கைத்தொழிலோடு சம்பந்தப்பட்ட நாட்டார் பாடல்களில் கிழக்கிலங்கை கிராமத்து மக்களின் சீவியத்திற்கு முக்கிய உறுதுணையாக இருந்த பாய் இழைத்தல் பற்றிய பாடல்கள்.

அ) 'அல்லையில பன்புடங்கி
ஆவரணப் பாயிழைச்சி
படுக்கைக்கு போட்டிருக்கன்
- என்ர பச்ச இஞ்சி
வாயாருக்கு...

ஆ) 'முத்துச் சரியன்
முழுதுமது கண்டாங்கி
அத்தனையும் பூத்தான் - இப்ப
அலர்படுக்கும்
பாயெல்லாம்.'

இப்பாடல்களின் மூலம், இம்மக்களின் உழைப்பு வாழ்வியல் பண்பாடு சிறப்பாகத் தென்படுவதை அறியலாம்.

# சேர, சோழ, பாண்டியர் ஆட்சி ஈழத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்

தம்பிஐயா தேவதாஸ்

இலங்கையின் பிற இடங்களைப் போலவே தீவகத்திலும் வரலாற்றுத் தெளிவு பெருங்கற் பண்பாட்டுடன் தொடங்குகிறது. பெருங்கற் பண்பாடு, தீபகற்ப இந்தியாவில் கி.மு 1500 முதல் கி.பி 500 வரை நிலவுகிறது. இப்பண்பாடு இலங்கையிலும் நிலவியிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி பொ.ரகுபதி, காரை நகரிலுள்ள களபூமியில் பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் சிலவற்றைக் கண்டு பிடித்தார். இத்தகைய சின்னங்கள் புங்குடுதீவின் வடபகுதியில் உள்ள ஊரைதீவிலும் காணப்படுகின்றன. இங்கு வட்டக் கற்களாலான சிறு கிணறுகள் தென்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஊரைதீவிலுள்ள ஐயனார் ஆலயம் பழமை வாய்ந்தது. இது இப்பொழுது சிலாலயமாக மாறிவிட்டது. இவ்வாலயத்திலுள்ள கருங்கற்தூண், லிங்கம் என்பன வளர்வதாக கூறப்படுகிறது. இவ்வாலயத்திற்கு வடக்கே உள்ள கடற்கரையில் வட்டக்கற்களினாலான இரண்டு கிணறுகள் இருக்கின்றன.

சேர, சோழ பாண்டிய மண்டலங்களோடு ஈழமண்டலமும் ஒன்றாகும். சேர, சோழ, பாண்டிய மண்டலங்களிலிருந்தும் சனங்கள் ஈழமண்டலத்தில் குடியேறினர் என்று யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை எழுதியுள்ளார்.

காலத்துக்குக் காலம் தென்னிந்தியாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் மக்கள் தீவுப்பகுதிகளில் குடியேறினர். தென்னிந்திய மக்களின் வழித்தோன்றல்கள் பற்றி காலத்துக்கு காலம் பதிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தனிநாயக முதலி பரம்பரையினரை உதாரணமாகக் கொள்ளலாம். புங்குடுதீவு உட்பட ஏனைய தீவுகள் சர்வதேச வர்த்தக மையமாக இருந்தமைக்கு பல சான்றுகள் உள்ளன. நெடுந்தீவில் பெருக்கு மரங்கள் காணப்படுகின்றன. புங்குடுதீவின் பழைய துறைமுகமான புளியடித்துறைக்கு அருகிலும் பெருக்கு மரங்கள் காணப்பட்டன. இம்மரங்கள் அரேபியரால் அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே அரேபியர் இத்தீவுகளுக்கு வந்து வர்த்தகத்தில் ஈடுபட்டனர் எனலாம். தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுவதனால் புங்குடுதீவில் சோழகனோடை, சோழன்புலம், பல்லதீவு போன்ற இடப்பெயர்கள் அவர்களால் இடப்பட்டிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு.

தமிழகத்திலே (கி.பி 9 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை) மேலாதிக்கம் பெற்ற சோழர் பெருமன்னர்கள் சுமார் ஒரு நூற்றாண்டிற்கு இலங்கையின் பெரும்பகுதியை தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தனர். இக்காலகட்டத்தில் இந்துசமயம் இங்கு மேலோங்கியிருந்தது எனலாம். தமிழ்நாட்டிலே ஆதிக்கம் பெற்ற இரண்டாவது பாண்டிய பேரரசு காலத்திலே அவர்களின் ஆதரவுடன் அவர்களின் தளபதிகளில் ஒருவன் ஆரியச்சக்கரவர்த்தி தலைமையில் யாழ்ப்பாணத்தில் தமிழரசு ஒன்றை உருவாக்கி கி.பி 1250 முதல் பல ஆண்டுகள் ஆட்சி செய்தான். இக்காலப்பகுதியில் இந்துசமயச் செல்வாக்கு தீவகத்தில் மேலோங்கியது எனலாம்.

இதன் பின் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டது. முன்னைய இருவரின் ஆட்சிக் காலங்களிலும் இந்துசமயம் நலிவுற்றது. பிரித்தானியர் காலத்தில் பொதுவாக சமய சுதந்திரம் நிலவியது எனலாம். ஆதி . காலம் தொடக்கம் கிரேக்க, உரோம, அராபிய, சீனத் தொடர்புகள் இலங்கையுடன் ஏற்பட்டது. இந்தியாவின் தமிழகம், கேரளம், ஆந்திரம், கன்னடம், கலிங்கம் மற்றும் வட இந்திய தொடர்புகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு தொடர்புகள் ஏதோ ஒரு வகையில் தீவகத்திலும் ஓரளவாவது நிலவி வந்தமைக்கு சில இடப்பெயர்கள் சான்று பகர்கின்றன.



பல்லதீவு, பல்லவன்புலம் போன்ற இடப் பெயர்கள் பல்லவத் தொடர்பையும் சோழன்புலம், சோழகனோடை போன்றவை சோழத் தொடர்புகளையும் மாறன்புலம், பாண்டியன் வளவு போன்றவை பாண்டியத் தொடர்பையும், கலிங்கன்புலம், கலிங்கராயன் வளவு போன்றன கலிங்கத் தொடர்பையும் செட்டிவளவு, செட்டியார் தோட்டம் என்பவை செட்டிகளின் தொடர்புகளையும் பணிக்கன்புலம் போன்றவை கேரளத் தொடர்பையும் சீனன்புலம், சாவகன்வளவு போன்றவை முறையே சீனத்தொடர்பையும் சாவகத் தொடர்பையும் காட்டுகின்றன.

புங்குடுதீவில் 90 சதவீதம் இந்துக்களே வாழுகின்றனர். தீவின் நடுப்பகுதியில் குறிப்பிட்டளவு கிறிஸ்தவர்களும் வாழுகின்றனர். பண்டைக்காலம் தொட்டு இந்தியாவின் தென் கோடியில் நெய்தல் நிலத்தில் வாழ்ந்து வந்த பரதவர்கள் 1534 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த போர்ததுக்கல் அரசினால் மதம் மாற்றப்பட்டு கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர். எனினும் கிறிஸ்தவ அறிவை போதியளவு கொண்டிராத நிலையில் வாழ்ந்து வந்தனர். இக்கால கட்டத்தில் புனித பிரான்ஸிஸ் சவேரியாரின் வருகையானது மிகப்பெரிய மாறுதலை பரதவர்கள் மத்தியில் ஏற்படுத்தியது. ஊக்கத்தையும் உழைப்பையும் மையமாகக் கொண்டு செயலாற்றிய புனிதரின் சேவைமிகு போதகம், அவர்கள் வாழ்ந்து வந்த பாதையை சீர்செய்தது.



1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கிறிஸ்தவர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் பரதவ கிறிஸ்தவர்களுக்குப் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. இதனால் இவர்கள் தமது தாயகத்தை விட்டு தப்பியோட முனைந்தனர். கொந்தளிக்கும் அலை கடலையும் குமுறிவரும் காற்றையும் துச்சமென மதித்து வெளியேறிய இச்சமூகத்தினர் இலங்கையின் வடபாலுள்ள பல தீவுகளில் குடியேறினர். இவர்களில் ஒரு பகுதியினர் புங்குடுதீவில் தென்கீழ் முனையிலும் இறங்கிக் குடியேறினர்.

சிலகாலம் செல்ல தீவின் மத்திய பகுதியில் ஆலமரங்களும், பற்றைகள், புதர்களும் நிறைந்த இடத்தில் புனித சவேரியாரின் ஆலயத்தை அமைத்தனர். பின்பு அதன் சூழலில் வாழத் தொடங்கினர். இவ்வாறே புங்குடுதீவின் வேறு சில பகுதிகளிலும் கிறிஸ்தவர்கள் வாழத்தொடங்கினர்.

பௌத்த மரபினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் புராதன வரலாறு கூறும் தீபவம்சம், மகாவம்சம் முதலிய நூல்களில் நாகதீபம் ஒரு முக்கிய பௌத்த நிலையமாக கூறப்படுகின்றது. இங்கு புத்தபிரான் வந்து சென்றார் என்ற ஐதீகமும் உண்டு. "நாகதீபம்" என்ற சொல் வட இலங்கை முழுவதையும் குறிக்குமாயின் சிறப்பாக நயினாதீவினையே குறிப்பிடுமெனக் கருதுவதாய்ப்படுகிறது. "பியங்குதீபம்" மற்றுமொரு முக்கியமான பௌத்த நிலையமாகக் கூறப்படுகின்றது. இங்கு புகழ்பெற்ற "அர்ஹந்தஸ்" (பௌத்த ஞானிகள்) வாழ்ந்தனரெனக் குறிப்பிடப்படுகிறது. இவ்விடம் பற்றி வல்லிபுரப் பொற்சாசனத்திலும் குறிப்பு உள்ளதெனக் கருதப்படுகின்றது. இவ்விடம் புங்குடுதீவு என அடையாளம் காணப்படுகின்றது. துறவிகள் தனிமையையும் அமைதியையும் விரும்பி காடுகளில் போன்று தீவுகளிலும் வாழ்ந்திருப்பர் என்று கூறலாம்.

"பியங்குதீபம்" எனக் கூறப்படுவது, புங்குடுதீவாகும். நம்பொத்த என்ற சிங்கள நிகண்டில் இதனை புவங்குதீவு எனக் கூறப்பட்டுள்ளது.

புங்குடுதீவு என்னும் சொல்லே காலகதியில் "பியங்கு தீபம்" என மாறியிருக்கலாம். அதனை புங்கு + உடுதீவு எனப்பிரித்து புங்கமரம் நிறைத்த தீவு எனப்பொருள் கூறலாம்.

புங்கமரம் நெய்தல் நிலத்துக் கருப்பொருள்களுள் ஒன்று என பேராசிரியர். க.கணபதிப்பிள்ளை கூறியிருக்கின்றார். "பியகுதிஸ விஹர கரிதே"- இந்த வாசகத்துக்கு இசிகிராயன், பியகுதிஸ விகாரை என்ற பெயர் கொண்ட விகாரையைக் கட்டுவித்தான் அல்லது இசிகிராயனின் நிர்வாக காலத்தில் பியகுதிஸ என்பவன் இந்த விகாரையை கட்டுவித்தான் என இருவிதமாக பொருள் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு அப்பால் மேற்குக் கடலில் உள்ள தீவுகளில் பௌத்தம் பரவியிருந்த முக்கியமான தீவு புங்குடுதீவாகும். இத்தீவை பாளி நூல்கள் பியங்குதீவமெனவும், "நம்பொத்த" என்ற சிங்களநூல் "புவங்குதீவு" எனவும் குறிப்பிடுகின்றது.

பியங்குதீபம் தூய்மையில் சிறந்த பௌத்தர்கள் வாழ்ந்த இடம் என்பது மகாவம்சம் மூலம் அறியக்கிடக்கிறது.

துட்டகாமினி போரில் எல்லாளனைக் கொன்ற பின் தனது மாளிகைக்குத் திரும்பி, போரில் நடைபெற்ற கொடுமைகளை எண்ணி மனக்கவலையுற்ற நேரத்தில் பியங்குதீபத்தின் தவப்பள்ளியிலிருந்து தேரர் எண்மர் துட்டகாமினியிடம் சென்று அவனைத் தேற்றினார்கள் என்ற தகவலை மகாவம்சம் தருகின்றது. வல்லிபுர விகாரையை கட்டுவித்தவரின் பெயர் "பியகுதிஸ" என வல்லிபுர பொற்சாசனம் தெரிவிப்பதிலிருந்து இந்த திஸ்ஸன் பியங்குதீபத்தில் வாழ்ந்தான் என்பதை அறியமுடிகிறது.

துட்டகைமுனு வாழ்ந்த காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.

துட்டகைமுனுவின் வரலாற்றுக் காலத்தில் புங்குடுதீவில் வாழ்ந்த பௌத்த துறவிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுவதால் புங்குடுதீவின் தோற்ற வரலாறு கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே தோன்றிவிட்டது எனலாம்.

(புங்குடுதீவு - வாழ்வும் வளமும்)

# இந்தியா–சீனாவை ஆதரிக்கும் மிட் ரோம்னி அமெரிக்காவுக்கு தேவையில்லை

## ஒபாமா காட்டம்

இந்தியா, சீனா, மெக்சிகோ, பிலிப்பைன்ஸ் போன்ற வெளிநாட்டவருக்கு வேலைவாய்ப்பை ஏற்றுமதி செய்யும் மிட் ரோம்னி அமெரிக்க ஜனாதிபதியாக கூடாது என்று தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா நேரடியாகவே தாக்குதலைத் தொடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் பிரசாரம் சூடு பிடித்து வருகிறது.

ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டு ஆட்சி செய்து வரும் பராக் ஒபாமா, தன்னுடைய பதவியை மிட் ரோம்னி பறித்து விடுவாரோ என்ற அச்சத்துடன் காணப்படுகிறார். அதன் விளைவாக அவருடைய ஒவ்வொரு சொல்லையும் செயலையும் கவனித்துத் தனது பிரசாரத்தை அமைத்துக் கொள்கிறார்.

சீனாவை எதிர்த்து நிற்பேன் என்று மிட் ரோம்னி பத்திரிகைகளுக்குப் பெரிய விளம்பரம் தந்துள்ளார். அதே சமயம் 'தி வோஷிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிகை, மிட் ரோம்னி தன்னுடைய பெய்ன் கபிடல் நிறுவனத்தின் வேலைகளை அயல்பணி ஒப்படைப்பு என்ற பெயரில் இந்தியா, சீனா, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகத் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு தன்னுடைய தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கியுள்ள ஒபாமா, இப்படிப்பட்டவருக்கு வாக்களிக்கலாமா என்று மக்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்.


புளோரிடா மாகாணத்தின் தம்பா என்ற இடத்தில் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ஒபாமா பேசுகையில், அமெரிக்கர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்பட்டு வருகின்றனர். அவர்களுடைய வேலைவாய்ப்பை எப்படிப் பெருக்க முடியும் என்று பார்க்கிற ஜனாதிபதி தான் நமக்குத் தேவை.

அமெரிக்காவில் வேலைவாய்ப்பை அதிகரிக்கப் போகிறவர்தான் நமக்குத் தேவை. நான் அந்த வேலையைத்தான் செய்து வருகிறேன். அதற்காகத்தான் நான் ஜனாதிபதி பதவிக்கு இரண்டாவது முறையாகப் போட்டி போடுகிறேன்.

ரோம்னி அவருடைய நிறுவன வேலைகளை மட்டும் ஏற்றுமதி செய்யவில்லை. அடுத்தவர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கிறாராம் என்று சாடினார் பராக் ஒபாமா.

ஒபாமாவின் தேர்தல் பிரசாரப் பொறுப்பாளராக இருக்கும் ஸ்டெபானி கட்டர் ரோம்னியின் செயல் குறித்து வாசகர்களுக்கு விளக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார்.

அவர் கூறுகையில், அமெரிக்கர்கள் செய்துவரும் வேலையை அதைவிடக் குறைவான சம்பளத்துக்கு வேலை செய்யும் சீன,



அமெரிக்க நிறுவனங்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் நிறுவனங்களில் முதலீடு செய்து வருகிறது ரோம்னியின் நிறுவனம்.

ஆனால் ஒபாமாவோ அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பை எப்படி அதிகப்படுத்தலாம் என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிந்தித்துச் செயல்படுகிறார்.

2010ஆம் ஆண்டில் இந்தியாவுக்குச் சென்ற போது கூட அவர்கள் அமெரிக்கர்களுக்கு 50 ஆயிரம் வேலைவாய்ப்பைத் தரப் போகின்றனர் என்பதற்காகத்தான் சென்றார். அதை அங்கேயே அவர் குறிப்பிட்டார்.

இந்தியர்கள் நம்முடைய வேலைவாய்ப்பைப் பறிக்கும்போது அந்த நாட்டுக்கு ஏன் செல்கிறீர்கள் என்று அமெரிக்கர்கள் கேட்டால், 50 ஆயிரம் வேலைவாய்ப்பைப் பெருவதற்காகத்தான் சென்றேன் என்று கூறுவேன் என்றார் ஒபாமா.

ரோம்னிக்கும் ஒபாமாவுக்கும் உள்ள இந்த முக்கியமான வேறுபாட்டை அமெரிக்க வாக்காளர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# உலக பார்வை

## நியுயோர்க்கையே அதிர வைத்த கோஷம்



அமெரிக்காவின் நியுயோர்க் டைம்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த மக்கள் ஓங்கார கோஷத்தை ஒலித்தனர்.

இந்த ஆண்டின் நீண்ட பகல் பொழுது கடந்த 20ஆம் திகதி காணப்பட்டது. 12 மணி நேரம் முழுவதும் வெயில் காணப்பட்டதையொட்டி நியுயோர்க்கின் டைம்ஸ் சதுக்கத்தில், இலவச யோகா பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

தலா இரண்டு மணி நேரம் என்ற வகையில் நான்கு பிரிவுகளாக யோகா வகுப்புகள் நடத்தப்பட்டன. ஆண், பெண், கறுப்பர், வெள்ளையர் என்ற பாகுபாடில்லாமல் 1,500இற்கும் அதிகமான மக்கள் இந்த யோகா வகுப்பில் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

முதலாவதாக வந்து கலந்து கொள்ளும் 1,500 பேருக்கு இலவச தரை விரிப்புகள் வழங்கப்பட்டன.

அக்குபஞ்சர் நிபுணர் திரிசனா காரே, அகில இந்திய யோகா சாம்பியன் ராஜஸ்ரீ சவுத்ரி உள்ளிட்டோர் யோகா வகுப்பை நடத்தினர்.

கொளுத்தும் வெயிலை கூட பொருட்படுத்தாமல் பலர் யோகாவை செய்தனர்.

சில யோகாசனங்களுக்கு முன்னதாக 'ஓம்' என்ற ஒலி எழுப்பப்பட்டது. இந்தக் கோஷம் விண்ணை முட்டும் அளவுக்கு ஒலித்தது.



பிரேசில் நாட்டின் ரியோடிஜெனிரோவில் நடைபெற்ற ரியோபிளஸ் 20 மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரிகிளிண்டன் (இடது) அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்டு ஆகியோர் சந்தித்து பேசினர்.

# துண்டாடப்பட்ட நிலையில் பதினான்கு உடல்கள்

## மெக்சிக்கோவில் சம்பவம்

வட மெக்சிகோவில் உள்ள சிட்டியின் சூப்பர் மார்க்கெட்டில் நின்று கொண்டிருந்த வானில், 14 சிதறிய உடல்கள் கண்டெடுக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மெக்சிகோவில் போதைப் பொருள் புழக்கம் அதிகமாக காணப்படுகின்றது, அங்கு அடிக்கடி போதைப் பொருள் கும்பல்களிடையே சண்டை ஏற்படுவது வழக்கம்.



அதேபோன்று சிதைந்த நிலையில் பல உடல்களும் கண்டெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் வடமெக்சிகோ சிட்டியில் உள்ள சூப்பர் மார்க்கெட்டில் நின்று கொண்டிருந்த வானில், சிதறிய நிலையில் 14 உடல்கள் மற்றும் ஒரு மிரட்டல் கடிதமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சிதறிய உடல்களில் 10 ஆண், 4 பெண் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மெக்சிகோ அட்டர்னி ஜெனரல் அலுவலகம் உடனடியாக நம்ப மறுத்தது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் விண்வெளிக்கு பயணமாகிறார் சுனிதா வில்லியம்ஸ்



இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மீண்டும் ஜூலை மாதம் விண்வெளிக்குப் பயணமாகிறார்.

கடந்த 2006ஆம் ஆண்டு சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்றார்.

அங்கு 6 மாதங்கள் தங்கி ஆய்வு மேற்கொண்டார். இந்த நிலையில் அவரை மீண்டும் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்ப அமெரிக்காவின் நாசா மையம் முடிவு செய்துள்ளது.

இவர் வருகிற ஜூலை 14ஆம் திகதி கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெளி தளத்தில் இருந்து புறப்பட்டு செல்கிறார். அவருடன் யூரி மலென் சென்கோ, அதிஹிகோ ஹொாசிடு ஆகியோரும் செல்கின்றனர்.

விபத்தில் பலியான கல்பனா சாவ்லாவுக்கு பிறகு இந்திய வம்சாவளியை சேர்ந்த 2 பெண் விண்வெளி வீராங்கனைகளை அமெரிக்காவின் நாசா விண்வெளிக்கு அனுப்பியது.

அவர்களில் ஒருவர் சுனிதா வில்லியம்ஸ், அவர் ஏற்கனவே விண்வெளிக்கு பயணம் செய்த போது 195 நாட்கள் தங்கி இருந்துள்ளார். 4 முறை விண்வெளியில் நடந்துள்ளார். அப்போது 29 மணி 12 நிமிட நேரம் செலவழித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பராகுவே நாட்டின் அதிபர் பதவியில் இருந்து நீக்கம்

பராகுவே நாட்டின் அதிபர் பெர்னான்டோ லுகோ மீது, அடுக்கடுக்காக எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து, அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான, பராகுவே நாடு வளர்ச்சியடையாத நாடுகளில் ஒன்று. இந்நாட்டில், தனது வசீகர பேச்சுத்திறமையால், கடந்த 2008இல் பெர்னான்டோ லுகோ என்பவர் அதிபராக பதவியேற்றார். "ஏழைகளுக்கு உதவுவேன்" என வாக்குறுதி அளித்து, தேர்தலில் வெற்றி பெற்றார். சமீபகாலமாக இவர் மீது, பதவியை துஷ்பிரயோகம் செய்தது, கடமையை செய்ய தவறியது, நில மோசடி என, பல்வேறு குற்றச்சாட்டுகள் அடுக்கடுக்காக எழுந்தன.

அரசுக்கு சொந்தமான வனப்பகுதியில் வசித்து வந்த, 150 விவசாயிகளை வெளியேற்ற பொலிசாருக்கு அதிபர் உத்தரவிட்டார்.



இதனால், கடந்த வாரம் பொலிசாருக்கும், விவசாயிகளுக்கும் மோதல் ஏற்பட்டு, 17 பேர் பலியாக நேர்ந்த சம்பவம் நாட்டை உலுக்கியது.

மேலும், வேறு ஒரு கட்சி தலைவருக்கு சொந்தமான நிலத்தைக் கைப்பற்ற, சட்டத் திருத்தம் கொண்டுவர முயன்றது போன்ற பல குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதை அடுத்து, பராகுவே செனட், நேற்று கூடி, அவரை பதவியில் இருந்து நீக்குவதற்காக, ஐந்து கண்டனத் தீர்மானங்களை கொண்டு வந்தது. இதில், அதிபருக்கு எதிராக, 39 ஓட்டுகளும், ஆதரவாக நான்கு ஓட்டுகளும் கிடைத்தது.

இதை அடுத்து, பெர்னான்டோ லுகோ பதவி நீக்கம் செய்யப்பட்டு, புதிய அதிபராக, தற்போதைய துணை அதிபர் பிரடரிக்கோ பிரான்கோ பதவி ஏற்றார்.

இதையடுத்து, லுகோ ஆதரவாளர்கள் வீதியில் திரண்டு போராட்டம் நடத்தினர். அவரின் ஆதரவாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பொலிசார், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், நீரை பாய்ச்சியும், அவர்களை அங்கிருந்து கலைத்தனர். இச்சம்பவத்துக்கு, பொலிவியா, வெனிசுலா, ஆர்ஜென்டினா, சிலி ஆகிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

# தாயின் வயிற்றில் வைத்து கருவிற்கு அறுவைச் சிகிச்சை

## மருத்துவ உலகின் சாதனை

அமெரிக்காவின் மியாமி மாகாணத்தில் 17 வாரக் கருவின் வாய் பகுதியில் இருந்த கட்டி அறுவைச் சிகிச்சை மூலமாக வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளது.

தாயின் வயிற்றில் இருந்த கருவை ஸ்கேன் செய்து பார்த்த போது, குழந்தையின் வாய் அருகே ஒரு கட்டி உருவாகி இருந்ததும் அந்த வகை கட்டி மிகவேகமாக வளரக் கூடியது என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து உடனடியாக எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சை மூலம் கட்டி அகற்றப்பட்டு தற்போது தாயும், கருவும் நலமாக வுள்ளனர்.

# இந்திய செய்திகள்

## பிரணாப்பை மம்தா ஆதரிப்பார்: மன்மோகன் சிங் நம்பிக்கை



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பிரணாப் முகர்ஜியை, திரிணமுல் காங்., தலைவர் மம்தா பானர்ஜி ஆதரிப்பார் அவர் இன்னமும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் தான் இருக்கிறார் என, பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

மெக்சிகோ, பிரேசில் நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் மன்மோகன் சிங், சிறப்பு விமானத்தில், டில்லி திரும்பும் வழியில், நிருபர்களிடம் கூறியதாவது: இந்திய பொருளாதாரத்தின் மந்த நிலை குறித்து கவலை கொள்ளத் தேவையில்லை.

பொருளாதாரத்தை மேம்படுத்த, மத்திய அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு, படிப்படியாக மீட்சியடையும். பொருளாதார பிரச்னையிலிருந்து மீள, எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தலில், பிரணாப் முகர்ஜியை, திரிணமுல் காங்., தலைவர் மம்தா ஆதரிப்பார் அவர் இன்னும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் தான் தொடருகிறார். மத்திய அமைச்சரவை மாற்றம் குறித்து, விரைவில் அறிவிக்கப்படும்.

இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

நிதியுதவி தவறில்லை, ஐரோப்பிய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் வகையில், இந்தியா அளித்துள்ள ரூ. 56 ஆயிரம் கோடி நிதியுதவி தவறில்லை என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். பிரேசிலில் நடந்த ரியோ 'பிளஸ் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு திரும்பும் வழியில் விமானத்தில் பேசிய அவர், ஐரோப்பிய பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் வகையில், இந்தியா அளித்துள்ள நிதியுதவியை எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்துள்ளதற்கு பதிலளித்துள்ளார். இதில் எவ்வித தவறுமில்லை என்று கூறியுள்ள பிரதமர், தேவைப்படும் போது மட்டுமே இந்தத் தொகை பயன்படுத்தப்படும் என்றும், இந்தியாவின் சேமிப்பாக அவர் தொடர்ந்து இருக்கும் என்றும் தெரிவித்தார்.

## வெடிகுண்டு மிரட்டல் கடிதம்: நித்தியானந்தா மீது குற்றச்சாட்டு



மதுரை ஆதீன மடத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் கடிதம் எழுதி, பழியை தங்கள் மீது போடுவதாக நித்தியானந்தா மீது மீனாட்சி பிள்ளைகள் அமைப்பு புகார் கூறியுள்ளது.

மதுரை ஆதீனம் அருணாகிரி சுவாமிக்கு வெடிகுண்டு மிரட்டல் கடிதம் வந்தது. அதில் முகவரி மீனாட்சி பிள்ளைகள் என எழுதப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து நேற்றுமுன்தினம் மாலை பொலிஸார் மதுரை ஆதீன மடத்தில் வெடிக்குண்டு சோதனை நடத்தியதில் எதுவும் கிடைக்கவில்லை. இந்நிலையில் மதுரை மீனாட்சி பிள்ளைகள் அமைப்பு பொலிஸ் டி.ஜி.பி.க்கு புகார் அனுப்பியது.

இதுகுறித்து மதுரை ஜெய்ஹிந்த்புரத்தை சேர்ந்த ஜெகதலபிரதாபன் தமிழகத் தலைமை செயலர் டி.ஜி.பி. ஆகியோருக்கு அனுப்பிய புகார் மதுரை மீனாட்சி பிள்ளைகள் அமைப்பின் செயலாளராக உள்ளேன்.

மதுரை ஆதீனம் மடத்தை அரசே ஏற்று நடத்தக்கோரி உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்தேன்.

இவ்வழக்கை திசை திருப்பும் நோக்கத்திலும் மீனாட்சி பிள்ளைகள் அமைப்பு நிர்வாகிகளை மிரட்டும் பொருட்டும் மதுரை ஆதீன மடத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் கடிதம் எழுதி, பழியை எங்கள் மீது நித்தியானந்தா போட்டுள்ளார்.

இவ்வழக்கை விசாரிக்க கூடாது என இன்ஸ்பெக்டருக்கும், என் பெயரில் மிரட்டல் கடிதம் போயுள்ளது. இதை விசாரித்து உரியவரை கைது செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## உண்ணாவிரத போராட்டத்தில் களமிறங்கும் எயார் இந்திய விமானிகள்



எயார் இந்தியா விமானிகளின் வேலைநிறுத்தம் நேற்றுடன் 47 வது நாளை எட்டியிருக்கும் நிலையில், நேற்று முதல் புது டெல்லியில் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்வதென இந்திய விமானிகள் சங்கம் (இந்தியன் பைலட்ஸ் கில்டு) முடிவு செய்துள்ளது.

ஊதிய உயர்வு, போயிங் விமான சிறப்பு பயிற்சி, இதர சலுகைகள் எனப் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி எயார் இந்திய விமானிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதற்கு மத்திய அரசு, டெல்லி உயர்நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மத்திய விமான அமைச்சர் அஜித் சிங் 100 இற்கும் அதிகமான விமானிகளை பணிநீக்கம் செய்தார். இருப்பினும் இதர விமானிகள் போராட்டத்தை கைவிடுவதாக தெரியவில்லை.

இந்நிலையில் தங்களது போராட்டத்தை காலவரையற்ற போராட்டமாக எயார் இந்தியா விமானிகள் அறிவித்துள்ளனர். இதுகுறித்து விமானிகள் சங்க உறுப்பினர்களின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட சங்க நிர்வாகி ஒருவர் கூறியது: எயார் இந்தியா நிர்வாகத்தின் பாரபட்சத்தையும் சுரண்டலையும் கண்டித்து விமானிகள் 10 பேர் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்குவர்.

விரைவிலேயே வேலைநிறுத்தம் முடிய வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால், பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள 101 விமானிகளை மீண்டும் பணியில் அமர்த்தும்வரை நாங்கள் வேலைக்குத் திரும்புவது சாத்தியமில்லை.

எங்களுக்கு மிக அதிகமான சம்பளம் கொடுக்கப்படுகிறது என்ற பொய் பரப்பப்பட்டு வருகிறது. எங்கள் சம்பள ரசீதை பொது மக்களிடம் காட்டத் தயாராக இருக்கிறோம். நாங்கள் எவ்வளவு வாங்குகிறோம் என்று அவர்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று அந்த நிர்வாகி கூறினார்.

விமானிகள் நடத்திவரும் வேலைநிறுத்தத்தை சட்டத்துக்கு எதிரானது என்று டெல்லி உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

வேலைநிறுத்தத்தை நடத்திவரும் இந்திய விமானிகள் சங்கத்தின் அங்கீகாரத்தை எயார் இந்தியா நிர்வாகம் ரத்துச் செய்துள்ளது.

## தூக்கு தண்டனை கைதி இறந்த பின் ஜனாதிபதியால் தண்டனை குறைப்பு

பள்ளி மாணவியை கற்பழித்து கொலை செய்த வழக்கில், தூக்குத்தண்டனை பெற்ற கைதி இறந்து ஐந்து ஆண்டுகளுக்கு பின், அவர் அனுப்பிய கருணை மனு அடிப்படையில், ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளது. இது இணையதளத்தில் விமர்சனத்துக்குள்ளாகி உள்ளது.

மகாராஷ்டிர மாநிலம், பீட் மாவட்டத்தைச் சேர்ந்தவர் பண்டு பாபுராவ் திட்கே. இவர், 2002இல் பாகல்கோட்டில் உள்ள ஜூலியால் தாலுகாவில் குடியேறி, சதாசிவ அப்பண்ணா மடத்தில் தங்கியிருந்தார். இவர், மடத்தின் அருகிலுள்ள பள்ளிக்கூடத்திலிருந்து, 16 வயது சிறுமியை கடத்தி வந்து, மடத்தில் வைத்து கற்பழித்து, கொலை செய்து விட்டு தலைமறைவானார். நான்கு நாட்கள் கழித்து துர்நாற்றம் வீசியதால், அப்பகுதியினர் கொடுத்த தகவலின்படி, சிறுமி உடல் கண்டெடுக்கப்பட்டது. தொடர்ந்து, ஷிருடியில் வைத்து பாபுராவை கைது செய்தனர்.

வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்றம், பாபுராவுக்கு, 2005 இல் தூக்குத்தண்டனை விதித்தது. இதை எதிர்த்து அப்பீல் செய்த போது, உயர் நீதிமன்றமும் தூக்குத் தண்டனையை உறுதி செய்தது. பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாபுராவ், ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினார். கடந்த, ஜூன் 20ஆம் திகதி, ஜனாதிபதியின் பார்வைக்கு கருணை மனு வந்தபோது, பாபுராவின் தூக்குத்தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனையாக குறைத்து கையெழுத்திட்டார். ஆனால், பண்டு பாபுராவ், பெல்காம் சிறையில் இருந்தபோது, எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு, 2007 இல், 31ஆவது வயதில் இறந்து விட்டார். இந்த தகவலை, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் மத்திய உள்துறை அலுவலகத்துக்கு முறைப்படி, கர்நாடக சிறை அதிகாரிகளோ, உள்துறை அலுவலகமோ தெரிவிக்கவில்லை. அதனால், கவனக்குறைவு காரணமாக நடந்த சம்பவம், ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் முடிவு, இணையதளத்தில் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது.

## மாயாவதியின் வீட்டிற்கு ஒரு ஆண்டில் 91 சிலிண்டர்கள் விநியோகம்




மானிய விலையில் அளிக்கப்படும் காஸ் சிலிண்டர்களை, மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட வி.ஐ.பி.க்கள், அளவுக்கு அதிகமாக பயன்படுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சமையல் காஸ் சிலிண்டர் விநியோகத்தில் வெளிப்படையான அணுகு முறையை மேற்கொள்ளும் வகையில், மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் சார்பில், "ஒன்-லைன்" தகவல் பரிமாற்றச் சேவை, நேற்று முன்தினம் துவக்கி வைக்கப்பட்டது. இதில், கடந்த ஒரு ஆண்டில், முக்கிய பிரமுகர்களுக்கு வினியோகிக்கப்பட்ட சிலிண்டர் விவரங்களும் இடம் பெற்றுள்ளன. உ.பி. முன்னாள் முதல்வரும், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவருமான மாயாவதிக்கு, கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 91 சிலிண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், அரசுக்கு 31 ஆயிரத்து 318 ரூபாய் செலவாகியுள்ளது.

பஞ்சாப் முன்னாள் டி.ஜி.பி., கே.பி.எஸ்.கில்லின் வீட்டுக்கு, 2012ஆம் நிதியாண்டில் 79 சிலிண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், அரசுக்கு 27 ஆயிரத்து 189 ரூபாய் செலவாகியுள்ளது. வெளியுறவு இணை அமைச்சர் பிரனித் கவுர் வீட்டுக்கு, 77 சிலிண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. தொலைத்தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ராஜா வீட்டுக்கு 89 சிலிண்டர்களும், உயர் நீதிமன்றம் முன்னாள் தலைமை நீதிபதி கே.ஜி.பால கிருஷ்ணன் வீட்டுக்கு 60 சிலிண்டர்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அந்த தகவல் பரிமாற்றச் சேவை இணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.சமையல் காஸ் சிலிண்டர்கள் வினியோகத்தில், கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், வி.ஐ.பி.,க்களுக்கு மட்டும் அளவுக்கு அதிகமாக சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது, ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.



எவர்சில்வர் பாத்திரங்கள் தொழில் நசிந்து வந்தாலும் காரைக்குடி, கப்ரென் முத்துபட்டணம் மற்றும் சில இடங்களில் மட்டும் இன்றும் தயாராகும் சில்வர் பாத்திரங்கள்.

## கொலை, கொள்ளை, கற்பழிப்பில் கேரளா முதலிடம்

இந்தியாவில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என அதிக குற்றங்கள் நடக்கும் மாநிலமாக கேரளா உள்ளதென சமீபத்திய தேசிய குற்ற புள்ளி விபரப் பதிவேடு தெரிவிக்கிறது. இந்தியாவின் நறுமணத் தோட்டம் என புகழப்படும் கேரளா குற்ற சம்பவங்கள் நடக்கும் மா நிலங்களில் முன்னிலை வகிப்பது அதிர்ச்சியளிக்கூடியதாக உள்ளது.

மிகவும் குற்றத்தினால் பாதிக்கப்பட்ட நகரமாக கேரளாவின் கொச்சி மாநகரம் விளங்குகிறது.

கடந்த 2010 வரை புள்ளி விபரப்படி குற்ற விகிதம் 424.1 இருந்தது. இது தேசிய சராசரியை விட இரட்டிப்பானது.

(தேசிய அளவில் 187.6) 2009 லிருந்து 2010 வரை ஒப்பிட்டு பார்க்கும் போது கொச்சியின் குற்றவிகிதம் 193 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறுகிறது அந்த புள்ளி விபரம்.

இதில் கடந்த சில வருடங்களாக உத்திரபிரதேசம் மற்றும் டெல்லியும் முக்கிய இடங்களை பெறுகிறது.




தொழிலதிபர் ஏ.எஸ்.பி.நாகரட்ணம் வீரர் ஒருவரை கௌரவிக்கிறார்.



விருந்தினராக கலந்துகொண்ட சிறுவர், மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவுக்கு ஏற்பாட்டாளர் செவ்வேள் நினைவுச் சின்னம் வழங்குகிறார்.



சம்பியன் வென்ற கே.சி.சி. அணியின் தலைவர் கிருபவனிடம் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் வெற்றிக் கிண்ணத்தையும் 100,000 ரூபாவுக்கான காசோலையையும் வழங்குகின்றார்.



அதிபர் அகிலதாஸ் வீரர் ஒருவரை கௌரவிக்கிறார்.



வட மாகாண கல்வி, விளையாட்டு மற்றும் கலாசார அமைச்சின் செயலர் ஆட்ட நாயகனுக்கு விருது வழங்குகிறார்.

# ஜே.பி.எல்.சம்பியன் கே.சி.சி.சி.




ஜெயரூபனின் அதிரடி ஆட்டமும் பந்துவீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சும் கைகொடுக்க சென்றலைட்ஸ் அணியை வீழ்த்தி ஜே.பி.எல் ருவென்ரி-20 போட்டியின் சம்பியனைக் கைப்பற்றியது கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் (கே.சி.சி.சி).

யு.ஆர் பிரெண்ட் பௌண்டேஷன் நிறுவனம் நடத்திய ஜெபனா பிறிமியர் லீக் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணித் தலைவர் கிருபவன் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது.

சென்றலைட்ஸ் அணியின் ஆரம்ப, பின் வரிசை வீரர்கள் பிரகாசிக்காத நிலையில் வதுசனன் 23 ஓட்டங்களையும் கோகுலன் 18 ஓட்டங்களையும் செல்ரன், ஜெனோசன் தலா 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே.சி.சி.சி. அணி சார்பில் பந்து வீசிய கிருபவன், பிரதீஸ், உமாநாத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், சாம்பவன் ஜனதாஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

135 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியான துடுப்பாட்டத்தால் இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஜெயரூபன் 6 சிக்ஸர்கள் 5 பௌண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களைப் பெற்றார். பங்குஜன் 21 ஓட்டங்களைப் பெற்றுரன் அவுட் முறையில் ஆட்டம் இழந்தார். ஜனதாஸ் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களைப் பெற்றார்.

சென்றலைட்ஸ் சார்பில் பந்து வீசிய கோகுலன் 31 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

ஆட்டத்தின் நாயகனாக கே.சி.சி. அணியின் ஜெயரூபன் தெரிவு செய்யப்பட்டார். தொடர் நாயகன் - சைலேஸ்வரன் (ஜொலிஸ்ரார்), சிறந்த துடுப்பாட்டவீரர் - ஜெயரூபன் (கே.சி.சி.சி.), சிறந்த பந்து வீச்சாளர்-சைலேஸ்வரன் (ஜொலிஸ்ரார்), சிறந்த களத்தடுப்பாளர் - சந்திரவதனன் (ஜொலிஸ்ரார்), சிறந்த மூன்றாம் நிலை வீரர் - கார்த்திக் (ஜொலிஸ்ரார்).

# நாளைய ஆட்டங்கள்

வட மாகாண கல்வித் திணைக் களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் 26 27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது இப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு.

-வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

-கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி.

- வவுனியா தவசிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

- வவுனியா இறம்பைக்ககுளம் பெண்கள் மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை.

வடமாகாண கல்வித் திணைக் களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் 26,27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது இப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி, வவுனியா தவசிகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

வவுனியா இறம்பைக்களம் பெண்கள் மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை.

# வலைப் பந்தாட்டப் போட்டிகள்

வட மாகாண கல்வித் திணைக் களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

நேற்று ஆரம்பமாகிய இப்போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன் கிழமையும் நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விபரம் பின் வருமாறு:

**15 வயதுப் பிரிவு:**

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா குளவிசுட்டான் மகா வித்தியாலயம்.

மன்னார் சென்.யோசப் வாஜ் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

முல்லைத்தீவு சூறாவில் மகா வித்தியாலயம் எதிர் வவுனி[illegible] சைவப்பிரகாச மகா வித்தியாலய[illegible]

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

கிளிநொச்சி இராமநாதபும் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் சென் ஆன்ஸ் மகா வித்தியாலயம்.

யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி.

இரண்டாம் சுற்றில் முல்லைத் தீவு மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

# வட மாகாண கபடிச் சம்பியன் இளவாலை ஹென்றியரசர்!

வட மாகாண கல்வித்தினைக் களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடிப் போட்டியில் மாகாண சம்பியனாக இரண்டாம் தடவையும் தெரிவு செய்யப்பட்டது.

கடந்தாண்டு மாகாண மட்டத்தில் பெற்ற சம்பியன் கிண்ணத்தைத் தொடர்ந்து இந்த ஆண்டும் தமது வெற்றியை தக்க வைக்க வேண்டும் என்ற துடிப்புடன் பெரும் முயற்சியுடன் பயிற்சியில் ஈடுபட்ட இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி தமது பயிற்சிக்கான பலனைப் பெற்றுக் கொண்டது.

இறுதிப் போட்டியில் ஏற்கனவே இரண்டு தடவைகள் மாகாண மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயத்துடன் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை மோதிக் கொண்டது.

இரு அணிகளும் சம வலிமை பெற்ற அணிகளாகக் காணப்பட்டாலும் கூட இரு அணிகளும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் மோதிக் கொண்டார்கள். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் தமது அனுபவத்தை உரிய முறையில் பயன்படுத்திய நிலையில் முதல் பாதி ஆட்டத்தில் மிகவும் கவனத்துடன் விளையாடி புள்ளிகளை பெற்றுக் கொண்டு 11க்கு 05 புள்ளிகள் என்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி துடிப்புடன் விளையாட அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் வேலாயுதம் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டதில் மேலும் ஹென்றியரசர் கல்லூரி 12 க்கு 06 புள்ளிகள் என்ற நிலையில் முன்னணியில் இருந்த நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 23 க்கு 11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்று மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

# ஒப்பந்த வீரர்கள் அறிவிப்பு

அவுஸ்திரேலிய தேசியக் கிரிக்கெட் அணிக்கான ஒப்பந்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபைக்கும், அவுஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர்கள் அமைப்பிற்குமிடையில் இடம் பெற்றுவந்த இழுபறி நிலைகள் தீர்க்கப்பட்டதன் பின்பே இந்த ஒப்பந்த விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ளதன்படி 17 வீரர்களுக்கு தேசிய ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது. வழக்கமான 25 வீரர்களுக்குப் பதிலாகவே இம்முறை 17 வீரர்க஌க்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் அளிக்கப்பட்ட வீரர்களில் கடந்த ஒப்பந்தப் பருவ காலத்தில் பெருமளவில் போட்டிகளில் பங்குபற்றிராத மிற்சல் ஜோன்சனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளுக்கு மாத்திரம் அவுஸ்திரேலியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் டேவிட் ஹசி, ஷேவியர் டொகேர்ட்டி ஆகியோருக்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ, இளம் துடுப்பாட்ட வீரர்களான உஸ்மான் கவாஜா, கலம் பேர்ஃஹசன், ஷேன் மார்ஷ், பிலிப் ஹியூஸ், அவுஸ்திரேலிய முன்னாள் டுவென்டி-20 அணித்தலைவர் கமரன் வைட், சகலதுறை வீரர்களான ஜோன் ஹாஸ்டிங்க் ஸ்டீவன் ஸ்மித், சுழற்பந்து வீச்சாளர்களான ஜேசன் கிரேஷா, நேதன் ஹொரிட்ஸ், வேகப்பந்து வீச்சாளர் டக் பொலிஞ்சர் ஆகியோருக்குக் கடந்த பருவத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படவில்லை.

# ஐ.சி.சி. தலைவராகிறார் நியூஸிலாந்தின் ஆலன் ஐசக்

ஐசிசியின் இப்போதைய தலைவராக இருக்கும் மத்திய அமைச்சர் சரத் பவாரின் பதவிக்காலம் அடுத்த வாரத்துடன் முடிவடைகிறது.

ஐசிசியின் ஆண்டுபொதுக்குழு ற்றும் செயற்குழு கூட்டம் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் ஞாயிற்றுக்கிழமை தொடங்குகிறது. 5 நாள்கள் நடைபெறும் இக் கூட்டத்தின்போது ஆலன் ஐசிக் தலைவராக பொறுப்பேற்றுக் கொள்கிறார்.

இந்தக் கூட்டத்தின்போது இப்போது நடைமுறையில் இருக்கும் சுழற்சி முறை தலைவர் பதவிக்கான விதிகளில் மாற்றம் கொண்டுவருவது, யூடிஆர்எஸ் முறை, ஒரு நாள் போட்டிகளில் சிறிய மாற்றங்களைக் கொண்டு வருவது, புதிய தலைமைச் செயல் அதிகாரி நியமனம் உள்ளிட்டவற்றுக்கு அனுமதி பெறப்படவுள்ளது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 25.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது